உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வைசியகுல விளக்கம்.

இது

மதுரைஜில்லா, திருமங்கலம் தாலுக்கா,

பேரையூரிலிருக்கும்

ம. முத்துச்சாமி செட்டியாரவர்கள் குமாரர்

ம. மு. சுந்தரம் செட்டியாரவர்களால்

இயற்றப்பட்டு,

புராணிகர், திருவிசைநல்லூர்

ஸ்ரீமத் சின்னைய நாயகரவர்களால்

பார்வையிடப்பட்டு,

சென்னை, கோமளேசுவரன்பேட்டை,

சச்சிதானந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

கீலக௵ பங்குனிமீ

1909.

விலை அணா நான்கு.

விஷய அட்டவணை.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
4	17	மடவாருடு	மடவாரோடு
7	26	யெபர்	பெயர்
9	25	தாழில்	தொழில்
11	11.	தவப்புரிய	தவம்புரிய
17	15	அரசர்களையும்,	அரசர்களையும், அவர்களுக்கடுத்து வைசியர்களையும்,
20	10	வகும்பு	வகுப்பு
21	9	மன்ளிய	மன்னிய
22	2	துனையார்	துணையார்
23	19	விடிளவும்	விடியளவும்
ஷை	24	வேளளரே	வேளாளரே
25	31	சோற்றினையே	சேற்றினையே
31	16	கொள்ளுமை	கொள்ளாமை
32	27	சூத்திரரர்	சூத்திரர்
39	23	ணினைவு	னினைவு
48	32	முதலிப	முதலிய
49	16	வாய்வை	வாய்மை
ஷை	30	தோற்றமாம்	தேற்றமாம்
56	9	ஞர்க்களை	ஞர்களை
ஷை	9	வளம்படுத்த	வளம்படுத்தற்
58	16	ரானர்	ராளர்
63	11	வணகர்	வணிகர்
65	5	ச்கு	க்கு
ஷை	14	கூறுவறால்	கூறுவதால
67	8	மிருபப	யிருபப
ஷை	'	சங்கிை த	சங்கிதை
ஷை	10	வினையாளர்	வினையாளா
70	3	யிருந்தலுஞ்	யிருந்தாலுஞ்
71	20	வெண்டு	வேண்டு
ஷை	21	பந்தனந்தாதியென்னும் பாடிய	பாடிய பந்தனந்தாதி யென்னும்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வைசியகுல விளக்கம்.

விநாயகர்துதி.

துங்க மனுவைசியர் தோற்றமிது தொல்லுலகிற்
புங்கவர்சொன் மாண்பே பொருத்தமதா—லிங்கெழுத
அஞ்ச வருவினைதீர்த் தாண்டருளு மைந்துகரக்
கஞ்சமலர்க் குஞ்சரமே காப்பு.

அவையடக்கம்.

நிலமண்டிலவாசிரியப்பா.

திருமலி யுலகி லரியநான் மறையுந்
தருமமுந் தவமுந் தழைத்தினி தோங்குந்
தென்றமிழ் நாட்டிற் றொன்றுதொட் டிலங்குந்
திவாகர நிகண்டு திருவிளை யாடல்
பாரதங் காந்தம் பகவற் கீதை
முதலிய நூல்கண் மொழிபவை யொத்து
மண்டல மெங்கும் வருணநான் காக
வுற்றவை தம்மி லுயர்வுதாழ் வுறவான்
மூவகைக் குடியின் மொழிதற் கேற்பப்
பல்வகைச் சாதியாப் பகர்வதிற் குறுதியா
யவ்வவர் குலப்பெய ரமைந்தன பதிகள்
சிற்சில வெங்குஞ் செறிந்தன வாக
முன்னோர் நூலின் முறையுணர்ந் திலர்போற்
பின்னோர்வேண்டிய பெற்றிக் கேற்ப

மாற்றியும் போற்றியும் வழக்கறி யாதே
முன்பின் மாறா முறையினைப் பிறழ்வாய்த்
தேற்றமில் லாதே செகதலத் தறியார்
வேதியர் நாமென வேந்தர் நாமெனப்
பேதமில் வணிகப் பெரியர் நாமெனச்
சீர்வே ளாண்மைத் திறத்தர் நாமெனக்
கூறுந ராகிக் குலமுறை கொள்ளத்
தாந்தா மென்றுந் தாங்கண்மே லென்றுஞ்
செருக்கொடு முயர்வைத் தீதுறப் பேசிக்
களிப்புறுந் தன்மை கண்டிது தீதெனக்
கூறினர் பற்பலர் குலநலந் துலங்கச்
சாதி நூல்கள் தமிழிலும் பலவா
யவைபல குலத்தோ ராதி யுற்பவந்
தொழில்வரு தோற்றந் தொகைவகை நெறியே
விரிகட லுலகில் வித்தார மாகச்
சொல்லுதல் கொண்டுஞ் சுருங்கச் சொல்ல
லழகு பற்றியு மவனியில் வைசியர்
நாமெனக் கூறும் நாலாங் குலத்த
ராயவே ளாள ரவர்களில் விலகிற
சூத்திர ரல்லது தூய்மையார் வைசிய
ரல்ல ரென்பதே யன்றியும் பிறரும்
வணிகர் நாமென்று வழுத்தது புன்மையு
முண்மையா யுலகி லுயர்குல வைசிய
ரின்னவ ரென்ப தெளிதினி லுணரவுங்
கடனீர் பருகிக் கார்மழை சொரியக்
கண்டதை யொப்பநாங் காட்டுது மென்றுஞ
சிறார்குட நீரிற் சிறுகழை நனைத்து
மழையிது வாமென வழங்குதல் போலு
மெழுத்துச் சொற்பொரு ளியாப்பணி யைந்து
முற்றுணர் புலவர்கண் முன்பயா வதனாற்
சொற்பயில் இளியெனத் தொகுத்தவர் கூறிய
வழியே யிதுவைசி யகுல விளக்க
மென்ப தாக வெழுதினன் விதங்கண்

வழுப்பல விருப்பினும் வழக்கிது சரியென
விகழா திதனை யேற்பது புலமையோர்
மாண்பமை குணனென மதித்தென துள்ள
மாசை யாறு வமைந்த தன்றியு
மென்னா டிசை விளக்கு மிரவியு மதியு
மின்மினி தன்னை வெருண்ட தில்லையே
யாதலி னென்னை யாதரித் தன்பு
கூர்ந்தினி துள்ளங் குதூகலித் திதனைக்
கொள்ளுக முத்தமிழ்த் தெள்ளி யோரே.

பாயிரம்

பரமேசுவரனது சிருட்டிக் கிரமப்படி மானுடர்கள் நான்குவருணமாவர். அவர்கள் வேதாகமங்களின் விதி வழுவாதொழுகுதலால் சர்வோத்கிருஷ்டர்களாயினர். அந் நான்கு வருணங்களின் அக்கிரமசையோக வழியாகத் தோன்றிய பிறவருணத்தார்களும் தத்தமக்குரிய நெறிமுறை தவறு திருந்து வருவாராயினர். சிலகாலமாக அந்நெறிதவறித் தாழ்ந்தோ ருயர்ந்தோரெனச் சாற்றுமவருடன் நூலுங் கற்பிப்பாராயினர். அது கண்டு உண்மையறியார்க்கு ஆன்றோர்கள் நூலாதரவுடனே அருமையான நூல்களான் அறிவுறுத்தியும் அவர்கள் அறியாபோன்று பின்னும் அக்கிரமராய மனம்போனவாறெழுதிய நூல்களை அச்சுப்புத்தகமாக்கி வெளியிடுவாருமாயினர். அங்ஙனமாதல்பற்றி இப்பொழுது நான்கு வருணங்களில், மூன்றாமவினராகிய வைசியர்கள் நாங்களென்று கூறுகிற சதுர்த்தர்கள் சூத்திரரேயெனவும், பிறவும் நியாயமாக விளக்குவது வாயிலாக வைசியர்கள் மான்மியமும் ஒருவாறு விளங்க இந்நூல் சுருக்கமாக வெழுதப்படுகின்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வைசியகுல விளக்கம்.

நூல்.

I. மானுட உற்பவமும் பெயரும்.

உலகமானது சிருட்டி, திதி, சம்மாரமென்னும் முத்தொழிலையுடைமையின் அது முதல்வனையுடையது; இது சித்தாந்தம்.

மானுடர்களும், தோற்றத்திற் சிறந்திருத்தலின் உற்பத்தியுடையரே.

ஆயின், உற்பத்தியிலேயே மானுடர் சதுர்வருண மரபினரோவென்னில், கூறுதும்:—

காந்தம் சூதசங்கிதை சாதிவரலாறறைந்த அத்தியாயம்.

"மதுமடையுடைக்குஞ்செந்தாமரைமலர்ப்பீடமேலோன்
விதுமுகத்தினின்முன்றோற்றவினக்குவாசனையான்முன்றோ
கதுமெனுமடவாரேமுதித்தனர்கவின்செய்தோளின் [ர்
வதுவைசெய்மடவாரோமென்னவருதித்தாரன்றே."

"ஊருவினுய்கர்மாதருடனுதித்தனராற்பின்றோர்
சாருமாமடவாரோரெந்தாளிடையுதித்தாராக

வாருமிந்நால்வர்கூட்டத்தாயினர்பற்பல்சாதி
யோருமாறுரைப்பமற்றீதுலகுபகாரமாமால்.”

என்று கூறுதலால் உற்பத்தியிலேயே வருணபேதமுண்டென்பதாயிற்று. அன்றியும், இது திருக்குறளில், “நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங், குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்” என்று கூறப்பட்டிருக்கின்றமையானு முறுதியாயிற்று.

சிருட்டிக்கிரமம் வேறு விதமாக நூல்களாற்றெரியப் படினும், மனுஸ்மிருதி முதலிய நூல்களி லிக்கருத்தே பிரபலமாம். இக்கருத்துப்பற்றியே ஔவையாராலும் பந்தனந்தாதி 82-வது செய்யுளில்,

“போதுசெறி சோலைப் புகார்வணிகன் பொற்கமலப்
போதுசெறி புங்கவன்றன் பொற்குறங்கி—னீதியுடன்
வந்த புகழார் வணிகர்கோன் பந்த னென்றே
யிந்தமயில் கண்டுயிலா தின்று.” என்று கூறப்பட்டது.

இதனால் மனுடர்கள் சதுர்வருணத்தாய்த் தொன்று தொட்டு வருகிறார்களென்பது இனிது புலனாயிற்று.

இனி இந்நான்கு வருணங்களுக்கும் வழங்கும் பெயர்கள் வருமாறு:—

முதலாவது வருணத்தாராகிய பிராமணர்களின் பெயர் திவாகரம் மக்கட்பெயர்த்தொகுதி, 8-வது சூத்திரம்.

“ஐயர் வேதியர் இருபிறப் பாளர், மெய்யர் மிக்கவர் மறையோர் பூசுரர், அந்தணர் நூலோர் அறுதொழி லாளர், செந்தீ வளர்ப்போர் உயர்ந்தோ ராய்ந்தோர், ஆதி வருணர், வேதபாரகர், விப்பிரர்தொழுகுலத்தோர் வேள்வி யாளர், முப்புரி நூலோர் முனிவ ரென்றிவை, தப்பில் பார்ப்பார் தம் பெயராகும்.” என்றும்,

இரண்டாவது வருணத்தாராகிய அரசர்களின்பெயர் ஷை திவாகரம் ஷை தொகுதி 19-வது சூத்திரம்.

"புரவலன் கொற்றவன் பெருமான் காவலன், அரைய னேந்தல் கோவே குரிசில், தலைவன் மன்னவன் வேந்தன் முதல்வன், நிருபன் பூபாலன் நரபதி பார்த்திவன், இறைவ னண்ணலெனப்பதி னெட்டும், அரசன் றொல்பெயராகு மென்ப." என்றும்,

மூன்றாவது வருணத்தாராகிய வைசியர்களின் பெயர் ஷை திவாகரம் ஷை தொகுதி, 32-வது சூத்திரம்.

"இப்பர் பரதர் வைசியர் கவிப்பர், எட்டியரிளங்கோக் கள் ஏர்த்தொழிலாளர் பசுக்காவலர், ஒப்பினாய்கர் வினைஞர் வணிகரென், றத்தகுசிரேட்டிகள் செட்டிகள்பேரே." என்றும்,

நான்காவது வருணத்தாராகிய சூத்திரர்களின் பெயர் ஷை திவாகரம் ஷை தொகுதி, 33-வது சூத்திரம்.

"வினைஞர்சூத்திரர்பின்னவர்சதுர்த்தர்
பாண்மையர்வேளாளர்மண்மகள்புதல்வர்
வாத்தியத்தொழிலோர்வண்களமருழவர்
சீர்த்தவேரின்வாழ்நர்காராளர்."

என்றும் முறையே கூறியிருப்பது காண்க இங்ஙனமே இத்திவாகரத்தின் வழிநூலாகிய சூடாமணி நிகண்டு மக்கள் பெயர்த்தொகுதி 5-வது கவி.

"ஐயர்வேதியரே நூலோரறுதொழிலாளராய்ந்தோர்
மையில்பூசுரரேசெந்தீவளர்ப்பவர்தொழுகுலந்தோர்
பொய்யிலந்தணரேயாதிவருணர்முப்புரிநூன்மார்பர்
மெய்யர்விப்பிரரேவேதபாரகர்வேள்வியாளர்."

"இருபிறப் பாளர்பார்ப்ப ரேற்றமேற் குலருயர்ந்தோர், வருமறைய வர்தம் பேராம்"

ஷை 12-வது கவி.

"புரவலன்பெருமானேந்தல்பூபாலன்வேந்தன்மன்னன்
நரபதிபொருநன்சக்கிரிகைமுடிநிருபனோடு

குரிசில்பார்த்திவனேகோவேகொற்றவனிறைவனண்ணல்
அரசன்பேரிவையீரெட்டாந்தலைவன்காவலனுமாமே.''

ஷை 25, கவி.

''இளங்கோக்கண்மன்னர்பின்னரிப்பரெட்டியரோநாய்கர்
வளம்பெறுவணிகர்நல்லான்காவலருழவர்மற்றும்
விளங்கியபாதர்மேயவினைஞர்செட்டியர்பன்னொன்றும்
உளங்கெழுவைசியர்பேராமுறுசிரேட்டிகளுமாகும்.''

ஷை 26 வது கவி.

''மண்மகள் புதல்வர் வாய்ந்த வளமையர் களமரென்று
மூண்மைசால் சதுர்த்தர்மாறு வுழவர் மேழியர்வே ளாளர்
திண்மைகொ ளேரின்வாழ்நர் காராளர் வினைஞர் செம்மை
நண்ணுபின் னவர்பன்னொன்று நவின்றசூத் திரர்தம் பேரே.''

என்றுங் கூறுவதறிக.

அகராதியில்.

வைசியர்பெயர். அயோனுருவில்வந்தோர், இப்பர், எட்டியர், சிரேட்டியர், சிலேபியர், தனவைசியர், தூணிகர், தேசிகர், தோனாரிகர், நாய்கர், பாதர், வணிகர், வாணிகர், இளங்கோக்கள், செட்டியர், தருமக்கிழவர், தாளாளர், மன்னர் பின்னர், முத்தொழிலோர்.

சூத்திரர்பெயர். அயனபதத்துதித்தோர், இசையும் தொழிலர், உழவர், களமர், காராளர், சதுர்த்தர், பின்னவர், மண்மக்கள், வினைஞர், வெண்களமர்.

மருதநிலமாக்கள்பெயர். உழவர், கடைஞர், கம்பளர், களமர், கிளைஞர், தொழுவர், மள்ளர், வினைஞர்.

என்றிருத்தலு முணர்க. அன்றியும், இம்முறையே நான்கு வருணத்தாரது தொழிலும் தாரதம்மியமும் இத் திவாகர நிகண்டுகளில் இரமந்தவரூது கூறியிருப்பதும், அதுபோலகராதியிலிருப்பதும், இந்நூல்கட்கொத்து வேறு நூல்களிலிருப்பதும் வருமாறு:—

II. நான்கு வருணத்தாரது தொழிலும் தாரதம்மியமும்.

(I) தொழில்.

முதலாவது திவாகரம்: 12-வது தொகுதி.

அந்தணர் தொழில்.

"ஓத லோதுவித்தல் வேட்டல் வேட்பித்த
லீத லேற்ற லென்றிரு மூவகை
யாதி காலத் தந்தண ரறுதொழில்" (78)

அரசர்தொழில்.

"அரச ரறுதொழி லோதல் வேட்டல்
புரைதீரப்பெரும பார்புரத்த லீதல்
கரையறு படைக்கலம் கற்றல் விடயம்" (79)

வைசியர் தொழில்.

"வணிக ரறுதொழி லோதல் வேட்டல்
ஈத லுழவு பசுக்காத்தல் வாணிகம்" (80)

சூத்திரர் தொழில்.

"வேளாள ரறுதொழி லுழவுபசுக் காவல்
தொள்ளிதின் வாணிபம் குயிலுவம் காருகவினை
யொள்ளிய விருபிறப் பாளர்க்கே வல்செய்தல்" (8)

குயிலுவ மின்னதென்பது.

"குயிலுவம் வாத்தியக் கொட்டெலாகும்" (82)

காருக மின்னதென்பது.

"பருத்திநூல் பட்டுநூ லமைத் தாடை யாக்கலும்
சுமத்தலும் பிறவும் காருக வினைத்தொழில்" (83)

என்று கூறுவதும்,

இங்ஙனமே சூடாமணி நிகண்டு.

12-வது தொகுதி.

"ஓதலே யோது வித்த லுடன்வேட்டல் வேட்பித் திட்டல்;
ஈதலே யேற்ற லாகுமேற்குமந் தணர்தொ ழிற்பேர்

ஓதலே வேட்ட லீத லுலகோம்பல் படைப யிற்றல்
மேதகு போர்செய் திட்டல் வேந்தர்செய் தொழில்க ளாறே"

"படைகுடி கூழ மைச்சுப் பற்றிய நட்பி ரெண்டு
நெடுமதி லரசி யற்கு நிகழ்த்திய வாறு பேத
மிடையற வோதல் வேட்டல் வேளாண்மை வாணி கத்தி
னுடனிரை காத்த லேரை யுழலாறும் வைசியர்க் காமே"

"வைசியர்தம் வினையா றுக்குள் வகுத்தமூத்தொழில்க ளான
பசுவோம்பல் பொருளையீட்டல் பாரிலேர்த் தொழிலைச் செய்
இசையவே தியருக் கேவல் குயிலுவத் தொழி லியற்றல் [தல்
அசைவில்கா ருகவினைக ளாக்கலுந் திருக் காறே"

"பட்டுநூல் பருத்தி நூலைப் பதனமைத் தாடை யாக்கல்
ஒட்டியே சுமத்த லோடே யுழுத்தல்கா ருகத்தின் செய்கை
கொட்டலே யூதலெல்லாங் குயிலுவத் தொழிலின் செய்கை
இட்டசா திகளுக் கன்றே யிறைமுறை யமைத்த வாறே"

என்று கூறுவது மதிவதுடன்,

அகராதியில்.

அந்தணர் தொழில் { ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆக (6)

அரசர் தொழில் { ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படை பயிற்றல் பொருதல் ஆக (6)

வைசியர் தொழில் { ஓதல், வேட்டல், பொருளீட்டல், ஈதல், பசுக் காத்தல், ஏருழல், ஆக (6)

சூத்திரர் தொழில் { மூதன் மூவர்க்கேவல் செய்தல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், குயிலுவத்தொழில் செயல், காருகவினைகளாக்கல் ஆக (6)

என்றிருத்தலும், பகவற்கீதை.

"குறைசெவைம் புலன்களைக் காண நான்குடன்
முறைமுறை யடக்கலும் தவமுந் தூய்மையும்

பொறையொடு கல்வியும் பொருந்து ஞானமு
மறையவர் தொழிலென வகுக்கப் பட்டதே"

"தலைமையுங் கொடையொடு தறுகணாண்மையும்
நிலைமையுங் கீழ்ப்படா நெஞ்சி னீட்டமும்
கொலையயில் போர்களிற் புறங்கொ டாமையும்
சிலைமலி தோளினு யரசர் செய்கையே"

"உழுதொழில் பசுக்களை யோம்பல் வாணிகம்
வழுவறச் செய்தொழில் வணிகர் வாழ்க்கையாம்
பழுதற விவர்களைப் பாது காத்தலே
விழுமிய தொழில்கள்வே ளாளர்க் கென்பவே"

என்றும்,

காளத்தி புராணம். 11-வது வருணாசிரம தர்மமுரைத்த அத்தியாயம்.

"அந்தணர் செய்தி வேள்வி யாற்றுத லாற்று வித்தல்
சந்தமா மறைக ளோதல் ஓதுவித் திடுதல் தக்கார்
சிந்தனை யுவப்ப வீத லேற்றிட லாறுஞ் செப்பில்
புந்தியின் மிக்கோ ரன்னோர் தொழிலெனப் புகன்றிட் டாரே"

"முடியுடை வேந்தர் செய்தி முத்தழ லோம்ப லோதல்
கொடைபுரிந் திடுதல் செல்வம் புரந்திடல் குறைக டற்பார்
அடையுமின் னுயிர்க ளுள்ள முவப்புற வரசு செய்தல்
இடமுற மனுநூ லாய்தல் செருவினிற் புறங்கொ டாமை."

"வணிகர்தஞ் செய்தி கூறின் மகவினை யாற்ற லோதல
உணர்வுடையவர்க்குத் தானமுதலவே ளாண்மையோம்பல்
தனிவில்வா ணிகத்தா லீட்ட லானினந் தழைப்பக் காத்தல்
துணிவுறும் இவையற் றன்றோர் செயலெனத் தோதை டன்றாய்"

"பின்னவர் செய்தி பேசின் பீடுசான் மறையோ ராதி
முன்னவர் மூவர் தம்மை முறையினு தரித்தல் மூவர்
சொன்னவை முடித்த லென்று நாகிதி விதியி னீட்டி
அன்னதை யுறத்தி னீத லவர்க்குமுந் தொழிலு மாமே"

ஷை 29-வது அத்தியாயம் 4-வது கவி.

"வணிகலுக் கிம்மையில் வாணி பத்தொடு
தணிவில்வே ளாண்மைசெய் திடல்ச தூர்த்தனுக்
கிணையிலிம் மூவரு மின்பு றும்படி
தணிவிலா தவர் பணி தாணி மைழத்தலாம்"

என்றும் அந்தணர் முதலியோர் தொழிலைக் கூறுமாறும் அறிக.

(2) தாரதம்மியம்.

குற்றாலத்தல புராணம் மந்தமாருதச்சருக்கம்.

"தாழ்குலத்தோர் கோடிசென்மந் தவப்புரிய வேண்டுமுயர்
சதுர்த்த ராகக்
கேழுழவர் கோடிதவஞ் செயவேண்டும் வணிகர் சென்மங்
கிடைக்க வேண்டிற்
சூழ்வணிகர் கோடிசென்மந் தவம்புரியி லரசரெனத்
தோன்று நிற்பர்
வாழரசர் கோடிசென்மந் தவஞ்செயினுங் கிடைப்பரிது
மறையோர் சென்மம்" என்றும்,

இலக்கண நூல் 13-வது கவி. ஒலிடளவு.

"அந்தணர்க்கு நாலா றரசற் கிருபதா
ம்நது விரல் வணிகற் கெண்ணிரண்டா-முந்துவிரல்
வேளாளர்க் கீராறும் வெள்ளோலை வேயனைய
தோளா யறிந்தொகுத்து" என்றும்,

காசிகாண்டம் ஆசாரங் கூறியது

"மறையவர் முதல் நால்வருந் தத்த மரபினிற் கன்னியை மணப்பி, னிறைமது துளிக்குங் காந்தளஞ் செங்கை பற்றுத லெறியதா மறையோ, ரறைகழலரசர் கன்னியை வேட்பினம் புகைப்பிடிக்கவே தியரு, மிறைவரும் வணிகர் மகளிரை மணப்பினுழவு கோல்பிடித்திட லியல்பாம்" (5)

"வேதியர் முதல் மூவர்வே ளாளர் கன்னியை விதி முறை வேட்பின், மாதர்மென் றதிலின் மென்றலை பிடித் தன் மறைநெறி வழக்கென வுரைப்பர், நீதியின் வழாத மணத்தினில் வேட்ட நேரிழை நன்மகவுயிர்க்கும், நீதற மணத்தின் வேட்டவ ளுது பயக்குறு சிறுவனை யுயிர்ப்பாள்"

ஷை இல்லறங்கூறியது.

"பின்னவர் தமது மரபின்வேட் டிடலாம் வணிகர்பின் னவருழைத் தமது, நன்மரப தனிற் கோடலா மரசர் தம்முழை நாய்கர்தம் மரபின், மன்னும்வே ளாளர் மரபினிற் கொளலா மறையவர் வருணநான் கிடத்துங், கன்னியைக் கொளலாம் பின்னவள் மறையோர்க்கருமகப் பெறிற்க தியடையான்" (15)

"கட்டிலிற் பீடந் தனிலிருந் தருந்தல் கப்பரை தனிலுண லாகா, உட்டெளி மறையோ ரளித்தசோ றயிர்தம் வேந்தர் சோ றுவந்தபா லடிசி, லெட்டிய ரளித்தவடிசில்நல் லடிசில் பின்னவ ரினிதிடு மூறல், கொட்டிய குருதி யாதலாற் பின் னோ ரிடத்துணல் குறிப்பினு மாகா" (35)

ஷை சிவசன்மாவை எமன் எதிர்கொண்ட அத்தியாயம்.

"அறுசு வைப்பொருள் பகர்ந்துழலு மந்தணர்தமை
நறியகன்னலிடு மாலை யின்றுக் கிடுதிதம்
முறைதி றம்பவுல காளுமுடி மன்னவர்தமை
வறிய கூவலிடை தள்ளுதி மதிந்துவிழவே" (42)

"மருள்கொ டுக்குநறை விற்கும்வ ணிகக்கடரை
வெருவ ரத்தசைக ளென்புபொடி யாகவிரைவி
னுரலிலிட்டுய ருலக்கையி னிடித் தொழிகலா
நரகிடைப்பதை பதைக்கநனி நண்ணவிடுவாய்" (43)

"நெடிய கநதர மறைக்கிழவர் கேமி யரசர்
படியில் வாழ்வணிகர் முன்னம்வெரு வாது பழிகூர்ந்
தடிக ணீட்டிய சதுர்த்தனை யதோமுகமெனுங்
கொடிய பாழ்நரகி னிட்டிடல் குறைத்தி டுதியால்"(44)

என்றும் கூறுவதால் அந்தணர் முதலியோரது * தாரதம்மியம் நன்கு விளங்கும்.

மேலெழுதிய வாற்றால் தொழிலுந் தாரதம்மியமுந் தெரிந்துகொள்வதுடன் வேளாளரே சூத்திர ரென்பதும் தெரியவருகிறதல்லவா? இதுபோலவே வரிசைக் கிரமமும் தெரியவெழுதுவாம்.

III. சாதிகளின் வரிசைக்கிரமம்.

பாரதம் ஆதிபருவம் இந்திரப்பிரத்தச் சருக்கம்.

"விதிமறை முறையிற் சாந்திசெய்கடவுள் வேதிய ராரவ மொருசார், மதிமுறை தவறு வமைச்சர்சொல் விழையு மன்னவ ராரவ மொருசார், நிதிசெழு செல்வத் தளகையோர் செருக்கா னிறைந்தபே ராரவ மொருசார், பதிதொறு முழவர் விளைபய னெடுக்கும் பறைகறங் காரவ மொருசார்". (16)

என்னுமிச்செய்யுளில் முறையே நான்கு வருணங்களையும் வர்ணனை செய்திருப்ப தறிக. இதுபோல்

பெரியபுராணம் திருக்குறிப்புத் தொண்டநாயனர் புராணம்.

"அருமறையந் தணர்மன்னு மிருக்கை யான வாகுதியின்
புகையடுத்த யம்பொன் மாடப்
பெருமறுகுதொறும்வேள்வி சாலையெங்கும் பெறுமவிர்ப்பா
கங்கொடுக்கும் பெற்றி மேலோர்
வருமுறைமை யழைத்துவிடு மந்திரமெம் மருங்கும்
வானவர்கா யார்திருவே கம்பர் முன்றில்
திருமலிபொற் சோபுரத்து நெருங்கு மெல்லாத் தேவரையு
மணித்தாகக் கொண்டு செல்லும்". (99)

என்று வேதியர்வீதிச் சிறப்பும்,

---

* தாரதம்மியமானது அந்தணர்களுக் கரசரும், அரசர்களுக்கு வைசியரும், வைசியர்களுக்குச் சூத்திரரும் தாழ்வாக விருப்பதைத் தெரிவிப்பதுடன் சூத்திரர் வேளாளர் என்பதையும் தெரிவிப்ப தறிக.

"அரசர்குலப் பெருந்தெருவுந் தெற்றி முற்றத்
தாயுதங்கள் பயிலும்விய விடமு மங்கண்
புரசைமதக் கரிகளொடு புரவியேறும் பொற்புடைய
வீதிகளும் பொலிய வெங்கும்,
விரைசெய்நறுந் தொடையலங்கற் குமரர் செய்யும்
வியப்புறுசெய் தொழில்கண்டு விஞ்சை விண்ணோர்,
நிரைசெறியும் விமானவூர் திகளின்மேலு
நிலமிசையும் பலமுறையு நிரந்து நீங்கார்". (100)

என்றரசர் வீதிச் சிறப்பும்,

"வெயிலுமிழும் பன்மணிப்பூண் வணிக மாக்கள்
விரவுநிதி வளம்பெருக்கும் வெறுக்கை மிக்க
வயினிலவு மணிக்கடைமா நகர்க ளெல்லாம்
வளப்புடைய பொருட்குலங்கண் மலிதலாலே
கயிலைமலை யார்கச்சி யாலயங்கள் பலவுங்
கம்பமுற்ற வியதன்மை கண்டு போற்றப்
பயிலுமுருப் பலகொண்டு நிதிக்கோன் றங்கப்
பயிலளகா புரிவகுத்த பரிசு காட்டும்." (101)

என்று வணிகர் சிறப்பும்,

"விழுவின்மலி திருக்காஞ்சி வரைப்பின் வேளாண்
விழுக்குடிமைப் பெருஞ்செல்வர் விளங்கும் வேணி
மழுவிளவெண் டிங்கட்பனி கம்பர் செம்பொன்
மலைவல்லிக் களித்தவரு ளுணவின் மூலம்
தொழுவுலகு பெறுமவடா னருளப் பெறுத்
தொன்னிலத்து மன்னுபயிர் வேத வாய்மை
யுழவுதொழி லாற்பெருக்கி யுயிர்க ளெல்லா
மோங்கவருந் தருமவினைக் குளரா லென்றும்." (102)
என்று வேளாளர் சிறப்பும்,

"ஓங்கியகாற் குலத்தொவ்வாப் புணர்விற் றம்மி
னுயர்ந்தனவு மிழிந்தனவு மான சாதி
தாங்குழீஇப் பிறந்தகுல பேத மெல்லாந்
தந்தகைமைக் கேற்றதனி யிடங்கண் மேவி
யாங்குவிறை விளைபயின்று மரபி னூற
வடுத்தவினைத் தொழின்முறைமை வழாமை நீடு
பாங்குவன ரிருக்கைநிலை பலவு மெல்லாம்
பண்புநீ டியவுரிமைப் பால வன்றே." (103)

என்று மேல்வர்ணனை செய்த நான்கு வருணங்களி னும் அக்கிரம சையோகத்தானே தோன்றிய வேனைய வரு ணத்தார்கள் சிறப்பும் வர்ணனை செய்திருப்ப தறிக.

இதுபோலவே திருவிளையாடற் புராணம் திருநகரப் படலம்

"இழிபவ ருடர்ந்தோர் மூதறோ ரிளைய வர் கழியா நோ யாற், கழிபவர் யாவரேனுங் கல்வலைப் பட்டு நெஞ்ச, மழி பவர் பொருள்கொண் டென்னுக் கெண்ணெய்போ லளந்து காட்டிப், பழிபடு போகம் விற்பா ராவணப் பண்பு சொல் வாம்". (46)

என்று கணிகையர்வளனும்,

"வழுக்கறு வாய்மை மாண்புங் கங்கைதன் மரபின் வந்த
விழுக்குடிப் பிறப்பு மூவ ரேவிய வினைகேட் டாற்றும்
ஒழுக்கமு மமைசசாய வேந்தர்க் குறுதிசூழ் வினையுங் குன்று
இழுக்கறு மேழிச் செல்வர் வளமறு மியம்ப லுற்றாம்". (54)

என்று வேளாளர் சிறப்பும்,

"புல்லியோர் பண்டங் கொள்வார் வினவினப் பொருடம் பக்கம், இல்லெனி னினமா யுள்ள பொருளுரைத் தெதிர் மறுத்தும், அல்லதப் பொருளுண் டென்னில் விலைசுட்டி

யறுத்து சேர்க்துஞ், சொல்லிது பிவையக் கொள்வார்தொன்
மா பிருக்கை சொல்வாம்!" (68)

என்று வணிகர் வளமும்,

"ஒற்றை யாழியா னுலகிரு ளொதுக்குமா போலச்
செற்ற நேமியாற் கலியிரு டின்றுகோ லோச்சி
மற்ற டம்புய வலியினுன் மாறடு சீற்றக்
கொற்ற மன்னவர் விழுக்குடிக் கோமறு குரைப்பாம்." (70)

என்று அரசர்வளனும்,

"ஆத்திக ருண்டென் றோது மறமுதற் பொருள்க ளொன்கு
நாத்திகம் பேசும் வஞ்சர் நாவரி கருவி யாக
ஆத்தனு லுரைத்த வேத வளவுகண் டுள்ளந் தேறித்
தீர்த்தராய்முத்திவேட்குஞ் செல்வர்தமிருக்கைசொல்வாம்."

என்று பிராமணர் பெருமையும்,

"தெய்வ நீறுமைந் தெழுத்துமே சிதைக்கல னுக
வெவ்வ யாசிரு வினையுடம் பெடுத்துழல் பிறவிப்
பௌவ மேழையுங் கடந்தான் பதமலர்க் கரைசேர்
சைவ மாதவ ருறைமடத் தனிமறு குரைப்பாம்."

என்று மாதவர் மாண்மியமும் உணர்த்துத லுணர்க.

ஆனல், புராணிகர் கணிகையர்முதல் மாதவரீறாகப் படிப்படியாக உயர்த்தி வர்ணித்துப் பாதாதி கேசவர்ணனைபோல அலங்காரமாகச் சொல்லியிருப்பினு மவரே சந்தேகங் கொள்ளாதபடி மற்றேரிடத்தில் கிரமப்படி வர்ணனை செய்திருப்பது மறிக. அதுவருமாறு:—

ஷை புராணம் திருநகரங்கண்ட படலம்.

"அருந்தவ ரிருக்கை யந்தணருறையு ளரசரா வணங்குல வணிகப், பெருந்தெரு கல்வே ளாளர்பே ரறஞ்சால் பெருங்குடி யேனைய கரிதேர், திருந்திய பரிமா நிலைக்களங் கழகம்

நீருக்கவை யகநுள்ள னுண்டி, இரக்தவர்க் கருத்து நல்லறச் சாலை யினையன பிறவுகள் கமைத்தான்"; (41)

என்னு மிதனுல் அருமையான தவசிரேஷ்டர்களிருப் பிடமும், அந்தணர்கள் வாசஸ்தலமும், இராஜவீதியும், குல வைசியர்கள் பெரியதெருவும், நல்லவேளாளர் பெருந்தரு மஞ் சார்ந்த பெருங்குடியும், ரத, கஜ, துரக, பதாதி கட்கிடமும், சபாமண்டபங்களும், சத்திரங்களும், மற்றும் வேண்டிய இடங்களும் அமைக்கப்பட்டன வென்று தெரி கிறதல்லவா? அவற்றுளும் தவத்தோர், வேதியர், அரசர், வணிகர், வேளாளரென்று படிப்படி தாழ்த்திய தாரதம் மியத்துக்கேற்ப இருக்கை, உறையுள், ஆவணம், பெருங்குடி முதலியனவும் தெரிவதுடன்,

முதலாவது தவசிரேஷ்டர்களையும், அடுத்துப்பிராமணர் களையும், அவர்களுக்கடுத்து அரசர்களையும், அவர்களுக் கடுத்து வேளாளரையும், அப்பால், ரத,கஜ,துரக, பதாதிகளி னிட முதலியவற்றையும் அவர் சொல்லியிருப்பதால், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் உத்தம நான்குவருணங் களையும், முறைதவறாமல் வர்ணனை செய்தவிடத்துச் சூத் திரர் என்பார் வேளாளரென்றே வியக்தமாகக் கூறி யிருப்ப தையுந் தெரிந்துகொள்க, அல்லாமலும் சேக்கிழார் சுவாமி கள் அருளிச்செய்த பெரியபுராணத்தில் "ஓங்கிய நாற்குலத் தொல்வாய் புணர்வில்" என்னுஞ் செய்யுளின் கருத்தை யொப்பவிவரும்

ஷை படலம்

"உத்தம குலத்து நாற்பெருங் குடியு முயர்ந்தவு மிழிந் தவு மயங்க, வைத்தவு ளான புறக்குடி மூன்று மறைவழுக்கா மனுவகுத்த, தத்தம நெறியின் றொழுகலை திகழுஞ் சைவமுந் தருமமுந் தழைப்ப, பைத்தெழுதிரைநீர் ஞாலமேற் றிலகம் பதித்தென நகர்வளம் படுத்தான்." (45)

என்று கூறியிருப்பதுமுணர்க.

ஷை பாரதம், பெரியபுராணம், திருவிளையாடற்புராண மென்னும் இவற்றின் ஆசிரியர்களான வில்லிபுத்தூராழ்வார் சேக்கிழார்சுவாமிகள், பரஞ்சோதி முனிவர் ஆகிய மூவரும் ஷை விஷயங்களை மனுஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களுக் கனுவாகவும் பிசகாமல் சொல்லியிருக்கிறா ரெனத் தெரிந்துகொள்ளல் வேண்டும். இதுபோல் மகா கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வாரும் வேளாளர்மேற் பாடிய ஏரெழுபது என்னும் பிரபந்தத்திலும் தெரிந்து கொள்க.

ஏரெழுபது.

"தொழுங்குலத்திற் பிறந்தாலென் சுடர்முடிமன் னவராகி
எழுங்குலத்திற்பிறந்தாலென் னிவர்க்குப்பின் வணிகரெனும்
செழுங்குலத்திற் பிறந்தாலென் சிறப்புடையாரானாலென்
உழுங்குலத்திற் பிறந்தாரே யுலகுய்யப் பிறந்தாரே."

"வேதியர்தமுயர்குலமும் விறல்வேந்தர் பெருங்குலமும்
நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தங்குலமும்
சாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்
கோதில்குலந் தனக்குரிக ருண்டாகிற் கூறீரே."

"கலையிட்ட மறைவேந்தர் கனல்வேள்வி வளர்ப்பதுவும்
மலையிட்ட புயத்தரசர் மணிமகுடஞ் சூட்டுவதும்
தலையிட்ட வணிகருயத் தனமீட்டப் படுவதுவும்
நிலையிட்ட வேளாளர் நுகலையிட்ட நீராலே."

"அந்தணர்க்கு வேதமுத லரசருக்கு வெற்றிமுதல்
முந்தியசீர் வணிகருக்கு முதலாய முதலுலகில்
வந்தவுயிர் தமக்கெல்லா மருந்தாக வைத்தமுதல்
செந்தமிழ்க்கு முதலாய திருவாளர் செய்முதலே."

"சீர்வளரு மறைவளரும் திறல்வேந்தர் முடிவளரும்
பேர்வளரும் வணிகருக்குப் பெருநிதிய மிகவளரும்
ஏர்வளருந் திருவளரு மிசைவளருங் கடல்சூழ்ந்த
பார்வளருங் காராளர் பயிர்வளருந் திறத்தாலே."

என்னுமிச் செய்யுட்கள் வேளாளரைச் சிறப்பித்துக் கூறி மேனூல்களுக்கு மாறுகொள்ளாது முறையே பிரம

க்ஷத்திரிய வைசிய சூத்திரரெனக் குறிப்பிடத் தொழுங்குலம் வேதியர் மறைவேந்தர் அந்தணரெனப் பிராமணர்களையும், மன்னவர், வேந்தர், அரசரென க்ஷத்திரியரையும், வணிகரென வைசியரையும், உழவர் காராளரெனச் சதுர்த்தர்களையுங் கிரமமாகக் குறிப்பிட்டிருப்ப தறிக. இன்னும்,

இலக்கண நூல்.

"வேதியன் வேந்தன் வணிகன்வேளாள னெனுமுறையே
ஓதுவர் வெண்பா வகவல் கலிவஞ்சி யொத்தவற்றின்
பேதெனு மவ்வகை யானே வருமென்பர்." (75)

என்று வேதியராதியோர்க்குரிய செய்யுளுங் கூறுவதறிக.

இதில், வேதியன் - பிராமணன், வேந்தன் - அரசன், வணிகன் வைசியன் என்றதன்மேல் சூத்திரனைச் சொல்லவேண்டுமிடத்து வேளாளன் என்று கூறியிருப்பது மறிக.

இங்ஙனமாக மனிதர்கள் நான்கு பிரதான வகுப்பாராவர். அவர்களுக்குள், தமிழ் நாட்டில் சாஸ்திரோக்தமாக முதல் வகுப்பார் பிராமணரென்றும், அவர்களுக்குரிய முக்கிய தொழில் வேதம் ஓதல் முதலிய ஆறென்றும், அவர்கள் மற்ற மூன்றுவகுப்பாருக்கு மேம்பட்டவரென்றும், இரண்டாவது வகுப்பார் அரசரென்றும், மூன்றாவது வகுப்பார் வைசியரென்றும், அரசரும் வைசியரும் சற்றேறக்குறைய அறுதொழிலுடையாரென்றும், இந்த மூவகுப்பினரும் உபவீததாரண யோக்கியராகலா னிருபிறப்பாளரென் றர்த்தந் தரக்கூடிய துவிஜரென்றும், நாலாவதார் சூத்திரர் என்றும், அவர் வேளாளரென்றும், அவர்கட்குரிய தொழிலானது வைசிடருக்குள்ள வியாபாரம், வேளாண்மை, பசுவோம்பல் ஆகிய மூன்றுடன் மேன்மூவருக் கேவல்செய்தல், குயிலுவம், காருகம் ஆகிய மூன்றுஞ்சேர அறுதொழி லென்றும்

இருப்பதில் வேளாண்மை பிரபலமாக மகான்களால் புகழப் பட்டிருப்பதறிக.

இப்படி யிருக்க ஷை சதுர்த்தர்கள் தாம் மூன்றாவதா ரென்றுசொல்வது பொருந்துமா? பொருந்தாது. ஆகவே இவர்கள் சொல்வதைப்பார்த்து, இவர்களுக்கு கீழ்ப்பட்ட அனேகசாதியாருள் சிற்சிலர் இதுதான் நல்லசமயமென்று கருதி வேளாளரென்றும், வைசியரென்றும், அரச ரென்றும், பிராமணரென்றும் தம்மைச் சொல்லுகிறார்கள். ஆகையால் முதலாவ திரண்டாவது வகுப்பு வியவகாரங்களை நிறுத்தி, மூன்றாவது வகுப்பாரென்று புத்தக மெழுதிய நான்காவதுவகுப்பாராகிய சூத்திரர்யாரென உபோத்காத மாக இந்தப் புத்தக மெழுதுவதில் மூன்றாவதா ரிவரென வியக்தமாகத்தெரியுமாகையால், இதுவரை நான்குவருணோற் பவம, பெயர், தொழில், முறை யெழுதியதாலேயே யாவர்க்கும் தெளிவாய், வைசியர் இன்னாரென்பதும் சூத்திரர் இன்னாரென்பதும் தெரிந்தபோதிலும் இன்னும் ஷை வேளாளரோ சூத்திரர் என்பதுபற்றி விரித்தெழுது வாம.

IV. வேளாளர் சூத்திரரேயெனல்.

பெரியபுராணம் இளையான்குடிமாறநாயனார் புராணம்

"அம்பொ னீடிய வம்பலத்தினி லாடுவாரடி சூடுவார்
தம்பிரானடிமைத்திறத்துயர்சால்பின்மேன்மைதரித்துளார்
நம்புவாய்மையினீடுசூத்திரநற்குலஞ்செய்தவத்தினா
லிம்பர்ஞாலம்விளக்கினாரிளையான்குடிப்பதிமாறனார்." (க)

என்னுமிதனால் வேளாளராகிய இளையான்குடிமாறநாய னார் சூத்திரரென்பது நன்கு விளங்கும்.

வேளாளரும் சூத்திரரும் தம்முள் வேறுபட்டவரெனின், அது பொருந்தாது.

"மன்னியவே ளாண்டொன்மை இளைசையாறர் மர மையா னுணவுமிக மறந்து வைகி, யுண்ணருங்கள் விருந்தமைழையி னுண்டிவேண்டி யும்பர்பிரா னணைபவய வழுதுவித்துஞ், செந்நென்முளை யமுதமனை யலக்காலாக்கிச் சிறுபயிரின் கறி யமுது திருந்தச்செய்து, பன்னலரு முணவருந்தற் செழுந்த சோதிப் பாலோக முழுதாண்ட பான்மையாரே."

என்று பெரியபுராணசாரத்திலுள்ள வித்திருவிருத்தத்தில் 'மன்னியவே ளாண்டொன்மை இளைசைமாறர்' என்று கூறப்படுதலின் வேளாளர் சூத்திரரேயாவர். இன்னுமிக் கருத்துப்பற்றியே வேளாளர் மேற்கூறியுள்ள திருக்கைவழக்கத்தில்

"வளைவாரி வையகமும் வானகமும் போற்ற
முளைவாரி வந்த முழுக்கை கிளைவாழ"

என்றிருப்பதுமறிக. அன்றியுங்,

ஷை புராண வரலாறு.

"திருமறையோர் புராணமவை பதின்மூன்று சிவவே தியரானை வழிபட்ட புராணமீரிரண்டு, குரைகழன்மா மாத்திரரென் றறுவர்முடி மன்னர் குருகிலமன் னவரைவர் வணிகர் குலத் தைவர், இருமைநெறி வேளாளர் பதின்மூவ ரிடையரிருவர்சா லியர்குயவர் தைலவினை யாளர், பாதவர்சான் றூர் வண்ணார் சிலைமறவர் சீசர் பாணரிவரோரொருவராம்பகருங் காலே."

என்னுமிச் செய்யுளில் வேளாளகுலத்து நாயன்மார்கள் பதின்மூவரொன்று குறிப்பிட்டிருப்பதறிக. அப்பதின்மூவ ரின்னாரென்பது

"வாயிலார் சத்தியார் விறல்சேர் மிண்டர்
வாக்கரையர் சாக்கியர்கோட் புலிகஞ் சாரர்
ஏயர்கோன் கலிக்காமர் முனையித் தாக்கு

நாயனுர் பெருந்துணையார் செருவில் வெம்போர்
சாதித்த முனையடுவா ராக நம்பி
பாயிருஞ்சே ரறுபதுபேர் தனிப்பேர் தம்மிற்
பதின்மூவர் வேளாளர் பகருங் காலே."

என்னுமிச் செய்யுளால் நன்குவிளங்கும்.

மேற்காட்டிய 'திருமறையோர்' என்னுஞ் செய்யுளில வேளாளர் பதின் மூவரெனத் தொகுத்துக்கூறியதை அந் நூலாசிரியர் 'வாயிலார்' என்னுஞ் செய்யுளால் பதின்மூவரின் ருரென வகுத்துக் கூறினுர். முன் 'அம்பொனீடிய' என்னுஞ் செய்யுளானுணர்த்திய இளையான் குடிமாற நாயனுரிப்பதின்மூவரி லொருவராக விருப்பதறிக. இவ் விளையான் குடிமாறநாயனுர் வேளாளரென்பதும், வேளாளரே சூத்திரரென்பதும், 'நம்புவாய்மையினீடு சூத்திர நற்குலம்' என்றுங் கூறியிருப்பதால் யாதோராசங்கையு மில்லாமல் நன்கு விளங்குகின்றனவன்றே? அன்றியும், இப்பதின்மூவர் புராணங்களிலும் குலஞ்சொல்லும்போது சிலவிடத்து உழவர் என்றும், சில விடத்து நாலாவதாரென்றும், சிலவிடத்து வேளாண்குலத்தவரென்றும் கூறுவதறிக.

திருவிளையாடற் புராணம் இந்திரன் முடிமேல்
வளையெறிந்த படலம்.

"இட்டவன் சிறையைநீக்கி யெழிலியை விடாதுமாறு
பட்டசிந்தையனே யாகப் பாகசாதனனுக் கென்று
நட்டவ னொருவேளாள னன்பினை யென்று தாழ்ந்தான்
மட்டவிழ்த் தொழுகுங்கம்ப மாலிகை மார்பினனும்". (57)

"இக்கண்வந் துயிர்க்கு றுற்ற மெய்தினும் வாய்மைகாத்து
வக்கனைத் தொழுகுநாலா மரபினு ளுரையை யாத்த
னெடுத்துரைமறைபோற் சூழ்ந்து சிறைக்களத்திட்ட டாப்பு
விடுத்தனன் பகடுபோல மீண்டனமேக மெல்லாம்". (58)

என்னுமிவ்விரண்டு செய்யுட்களுள், முதற் செய்யுளில் வேளானென்று குறிப்பிட்ட ஒருவனை இரண்டாவது செய்

யுளில் நாலாமரபினனென்று குறிப்பிட்டிருப்பதுமறிக. இதனால், வேளாளர் நாலாமரபினரான சூத்திரரென்பதே யுறுதியாம். இதுவேயுமன்றி,

வேளாளர் சார்பாகக் கூறியுள்ள தொண்டமண்டல சதகம்.

"காவிய மாகிய காமீகங் கண்டுங்கங் காகுலத்தோ
ரோவிய சூத்திர ராக விருபத்து நான்குயர்ந்த
மேவிய கோட்டத்தி லுங்கரி கால வளவன் மிக்க
வாவிய மேன்மை கொடுத்தளித் தான்றொண்ட மண்டலமே'

என்னு மிச்செய்யுளில் கங்காகுலத்தோர் சூத்திர ரென்று கூறியிருப்பது முணர்க. வேளாளர் கங்காகுலத்தவ ரென்பதைத் திருவிளையாடற் புராணத்தின் "வழுக்கறு வாய்மை' என்னுங் கவியில் "கங்கைதன் மரபின்வந்த" என் றிருப்பதாலறிக.

அன்றியும், தொண்டமண்டல சதகக்காப்புச் செய்யுளில் "தொண்டலை நிகர்க்கும் வேளாண் குடியொடு தழீஇய தொண்டமண்டல சதகந்தன்னை" என்றும்,

"கோலூ ருழவுக் குடியா னவன்றன் குமிழம் பட்டு, வேலூர்க் கிழானொரு வேளாளன் பற்றம் விடிளவும்." என்றும் கூறியிருப்பதால் அக்காலத்தில் வேளாளர்க்குக் கிழா ரென்னுஞ் சாதிப் பட்டப்பெயரு முண்டென்பது மினிது விளங்கும். அன்றியுர், இவர்களை மருதநிலமாக்கள் என்பதும் தெளியச்சிறி தெழுதுவாம்:—

V. வேளாளரே மருதநிலமாக்களெனல்.

திவாகரம்.

"களமர் தொழுவர் மள்ளர் கம்பளர்
வினைஞர் உழவர் கடைஞர் கிளைஞரென்
றனையவை கழனிக் கடைத்தவர் பெயரே."

நிகண்டு மக்கட்பெயர்த் தொகுதி.

களமரே தொழுவர் மள்ளர் கம்பள ருழவரோடு
வினைஞரே கடைஞ ரேழ்பேர் வினைவுறு மருத மாக்கள்

அளவறு கடைச்செம்மறை யாற்றுக்கா லாட்டியென்பேர்
உளமகிழ் மகிழ்ந்த ஞான இறைவனுக் கிலைஞரே. (79)

இவற்றால், மருதநிலமாக்கள் பெயரும், அந்தப் பெயர்கள் முன் வேளாளர்களுக்குச் சொன்ன பெயர்களின் ஏறக்குறைய ஒத்தே யிருத்தலும் தெரிந்துகொள்ளலாம். அன்றியும், இவ்வேளாளர் மீது கம்பநாட்டாழ்வா ரருளிச் செய்த ஏரெழுபது என்னும் பிரபந்தம் ஒன்றினாலேயே இவர்களே மருதநிலமாக்க ளென்பது வெளிப்படையாம். வருமாறு:—

ஏரெழுபது.

"கங்கைபெறுங் காராளர் கருவியெழு பதுமுரைக்க
அங்கைபெறும் வளைத்தழும்பு முலைத்தழும்பு மணியம்மை
மங்கைபெருந் திருவுருவாய் வந்துறைந்தார் தமைவலஞ்செய்
கங்கைபெருந் தடவிகடக் களிற்றனைக் கழல்பணிவாம்."

"மறைக்குரிய வந்தணரா னெறிபால மனுவிளக்கத்
துறைக்குரிய காராளர் தமதுவாம பிணிதோங்க
மறைக்குரிய பூமனையும் வணையெனபத் தாமனையும
பிறைக்குரிய நெடுஞ்சடிலப பெம்மானை யுமபணிவாம"

"ஆழித்தேவர் கடலானு ரல்லாத்தேவ ரம்பலத்தார்
ஊழித்தேவா தாமகூடி யுலகாக்க வல்லாரோ
வாழித்தேவர் திருமகன் வையமபுரக்கும பெருங்காளர்
மேழித்தேவா பெருமைக்கு வேறுந்தேவா கூறேனே."

"மெய்வரம்பா நிற்கின ற வேதநா னெறிவரம்பாம்
இவ்வரம்பு மவ்வரம்பு மிப்புவிக்கு வரம்பாமோ
பொயவரம்பு தவிர்த்தருளும் புவிமடந்தை திருமைந்தர்
செயவரம்பு திருத்தாரேற் றிசைவரம்பு திருந்தாதே."

"பார்வேந்தா பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வ மழிவுபடா திருத்தலினாற்
போர்வேந்தர் போரகலாத் திவர்வெல்வர் இவர்தோம்பர்
ஏர்வேந்தர் போர்க்களைதந் திரப்பவருந் தோலாரோ."

"கார்நடக்கும் படிநடக்குங் காராளர் தம்முடைய
ஏர்நடக்கு மெனிற்புகழ்சா லியலிசைநா டகநடக்கும்
சீர்நடக்குந் திறநடக்குந் திருவறத்தின் செயனடக்கும்
பார்நடக்கும் படைநடக்கும் பசிநடக்க மாட்டாதே."

இவ்வேரெழுபதின் செய்யுள்களாலே வேளாளர் மருத நிலத்துக்குடைய ரென்பது நன்றாய் விளங்குவதுட னிகண்டு மக்கட்பெயர்த்தொகுதி 25-வது கவியில் கூறிய வேளாளர் பெயரும் செய்யுள்கடோறும் விளங்கும்: ஆனாலிவ்வேளாளர் மருதநிலத்துக் குரியவர்களாயினும் அவர்கள் அந்நிலத் தலைவர்களே யல்லது அந்நிலத்துப் பயிர்வேலை செய்பவர்களல்ல; அவர்கள் வேறாகயிருத்தல் கூடுமென்று சிலர் கருதுவர்கள் ஆகையாலிவ்வேளாளரே ஷை மருதநிலத்தில் பயிர்க்குரிய சகல வேலைகளுஞ் செய்பவர்களென்று ஷை ஏரெழுபது செய்யுள்களாலேயே கரதலா மலகம்போலக் காணலாம். இவ்விஷயம் வேறு அநேக நூல்களிலும் வெள்ளிடைமலை போல் விளங்கும். அவற்றை யெழுதில் விரியுமாகையால் சுருக்கமாக ஷை ஏரெழுபதிலேயே சிலகவிக ளெழுதுவாம். வருமாறு:—

"பழுதுசால் வகையறியாப் பழமறையோர் பெருவேள்விக்
குழுதுசால் வதுகலப்பை யுயர்வான தென்றக்கால்
எழுதுசால் பெருங்கீர்த்தி யோராளும் பெருக்காளர்
உழுதசால் வழியன்றி யுலகுவழி யறியாதே."

"மேடுவெட்டி வளப்படுத்தி மிகவரம்பு நிலைநிறுத்திக்
காடுவெட்டி யுலகநெறி காராளர் காத்திலரேல்
மேடுவெட்டிக் குறும்பறுக்கும் வேல்வேந்த ரெங்காளும்
காடுவெட்டி யுழுதவருங் கலிகளைய மாட்டாரே."

"வெறுப்பதெல்லாம் பொய்வினையே வேளாளர் மெய்யாக
ஒறுப்பதெல்லாம் கலிவினையே உள்ளத்தால் வெள்ளத்தால்
செறுப்பதெல்லாம் பொய்வினையே செய்யின்வளமறிந்திந்து
மதிப்பதெல் லாஞ் சோற்றினையே வளம்படுத்த பொருட்டா

"வளைகளையு மணிகளையு மலர்களையும் வரும்பலவின்
சுளைகளையுங் கொடுகரைக்கே சொரிபொன்னித் திருநாடர்
விளைகளையுண் செஞ்சாலி வேருன்றிக் கோடுகொள்ளக்
களைகளையா விடில்வேந்தர் கலிகளைய மாட்டாரே."

இச்செய்யுட்களால் வேளாளரே உழுதல், மேடுவெட்டி வளப்படுத்தல், வரம்புதிருத்தல், களையெடுத்தல் முதலிய வெல்லா வேலைகளையும் செய்பவரென்பது பெறப்பட்டது. இந்த வேரெழுபதில், இன்னும் நடல், விதைத்தல், அறுத்தல். பொலிதூற்றல் முதலான வேலைகளெல்லா மிவர்களே செய்யும் சிறப்பினைச் சொல்லியிருப்பதுபோலத் திருக்கை வழக்கமென்னும் பிரபந்தத்திலுங் காணலாம். அஃதிப்புத்தகத்தின் மற்றோரிடத்தி லெழுதப்பட்டிருக்கிறது. அன்றியும், வேளாளரே உழுதொழிலாள ரென்பது திருவிளையாடற்புராணத்தாலும் விளங்கும். வருமாறு:—

திருவிளையாடல் புராணம் பன்றிக்குட்டிக்கு
முலைகொடுத்த படலம்.

"சுகலனென் றொருவேளாள னவன்மனை சுகலை யென்பா
ளிகலருங் கற்பி னாள்பன் னிருமகப் பெற்றான் செல்வப்
புகலருஞ் செருக்கா லன்ன புதல்வரைக் கடியா ராகி
யகலருங் களிப்பு மீதூ ரன்பினால் வளர்க்கு நாளில்." (4)
"தொழுதொழின் மறந்துவேடத் தொழிலுழந் துழல்வீர் [நீர்மண்
ணுழுதொழி லுடையநீராற் பன்றியி னுதரத் தெய்திக்
கொழுந்தழ லனைய வேனக் குருளையாய்த் தந்தை தாயை
இழந்தல முறுமி னென்று விட்டனன் கடிய சாபம்." (7)

என்னுமிவ் விரண்டு செய்யுள்களால் சுகலனென்னும் வேளாளன் மனைவி சுகலையென்பவள் பன்னிரண்டு குழந்தைகள் பெற, அக்குழந்தைகள் வேடத்தொழிலை மேற்கொண்டு கானகம் சென்று முனிவனை யிம்சிக்க அம்முனியன்

தொழுந் தொழிலைமறந்தகவி ருழுந் தொழிலாகையால், யன்றியாப் பிறப்பீரெனச் சாபமிட்டனனென்பது பெறப் பட்டது. இதனல் வேளாளர் உழுதொழிலுடையரென வற்புறுத்தியவாறறிக.

இங்ஙனமாகத் திவாகரம் நிகண்டு என்னுமிவற்றில் விதித்த பிரகாரம் மருதநிலமாக்கள் வேளாளரே யென்பது மேலெழுதிய எமுபது முதலியநூற் பிரமாணங்களாலே தெரிகிறதல்லவா.? அப்படியிருக்கச் சிலர் வேளாளரே சூத்திரரென்றும் அவர்களே மருத நிலமாக்களென்றும், திரு பிங்கில் நிகண்டாசிரியர் சூத்திரர்வேளாள ரென்று மக்கட் பெயர்த்தொகுதி, 26-வது கவியால் தெரிவித்தவர் மருதநில மாக்கள்பேரென்று 71-வது கவியேன் சொல்லல் வேண்டும்? ஆனல், ஐந்து நிலங்களையும் தனித்தனி பிரித்துச்சொல்ல வேண்டிய அவசியத்தால் நேர்ந்த தென்னின், மருதநிலத் தார் பேர்சொல்ல ஆரம்பித்தகவியில் சூத்திருக்குச்சொல்லி யிருக்கிற, 26-வது கவியிலுள்ளபேர் சொல்லலா மென்று குறிப்பிடலாமல்லவா? அப்படி ஷை நிகண்டு நூலாசிரியர் கன்னியாராசியின்பேர் சொல்லவந்தபோது, அரிவையர்கள் பேரெல்லா மிதற்குஞ் சொல்லலாமென்று சொல்லியிருக் கிறாரல்லவா? வேளாளர்தாம் சூத்திரரென்று சொல்லி யிருந்தபோதும் அவரினும் மருத நிலமாக்கள் வேறுவரென். பதே நூலாசிரியர்கருத்து என்றுதெரியவருகிற தெனின், அற்றன்று; திவாகரத்தின் வழிநூல் நிகண்டாகையால், முதனூலாகிய திவாகரத்தில் * மக்கட்பெயர்த் தொகுதி 33-வது சூத்திரக்கருத்தும், ஷை திவாகரம் 12-வது தொகுதி 81-வது வேளாள ருழுதொழி லென்னுஞ் சூத்திரக்கருத்தும் நான்காவதாராய வேளாளரே சூத்திரரெனவும், அவர்களே மருதநிலமாக்க ளெனவும், உறுதியாகத்தெரிந்தே தான் நிகண்டிநூசிரியராகிய மண்டல புருடரும் மக்கட்பெயர்த் தொகுதி 26-வது கவியாலும் ஷை 12-வது தொகுதி 46-வது கவியாலும் வேளாளரே சூத்திரரெனவும் மருத நிலமாக்களெனவுங் கூறினர். இவ்விருநூல்கட்கு மொத்

னுத்தான் பெரியபுராணம், திருவிளையாடல் புராண முதலிய நூல்களிலும் வேளாளரே சூத்திரரென்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. அங்ஙனமாயின், நிகண்டு நூலாசிரியர் மருதநிலமாக்கள் பேரென்றொருகவி யேற்படுத்தி அதற்குப்பெயர் விதந்துகூறிய தென்னெனின், நூல்சொல்லுகிறதுறைக்கேற்ப முதலில் மக்கட்பெயர் சொல்லவேண்டிய விடத்தில் முறையே நான்குவருணங்களையுங் கூறவேண்டியமாபின்படி சூத்திரர் பேரென்று கூறி வேளாளரைச்சுட்டி அவர் நிலங்களைக் கூறவந்தபோது சூத்திரருக்குச் சொன்ன பேர்தானென்று குறிக்கில் அது குன்றக் கூறலென்னுங் குற்றத்துடன் மருதநிலம் ஏனைய நிலங்களினு மேலென்னும் கௌரவத்திற்கு ஆனிவருமாகையால் மேல்நூல்களிற் சொல்லியபடி நான்கு வருணங்களுக்கும் பெயர் கூறினர். அதன்கருத்தாவது பிறப்பு, தொழில், தாரதம்மிய முதலான சிலவுட்கருத்து நோக்கிப் பெயர்சொல்வது சம்பிரதாயமாகையால், மருதநிலத்தின் தாரதம்மியத்தையுத்தேசித்து,விதந்து சொல்லவேண்டியதாயிற்றென்பது. ஆனாலீண்டொரு திருட்டாந்தம் நமக்குடன்பாடில்லாதது வருமாறு:—

சில நிகண்டு புத்தகத்தில் நூதனமாகச் செய்து சேர்த்திருக்கிறகவியில் கோவைசியரென்று கோக்காத்தல் வகையால்" வந்த கோவலருடன் கோவர்த்தனரிப்பர் முப்பேர்,'' என்றது எவரைக்குறிப்பிடுகிறது? ஷை புத்தகத்தில் முல்லைநிலமாக்கள்பேரைத் தெரிவிக்கிற 69-கவியாலும், அகராதி முதலியவற்றில் இடையரென ஷை பதத்துக்கும் பொருளிருக்கிறபடியாலும், ஷை கோவைசிய ரென்பதற்குப் பெயர் சொல்லும்போது 69-வது கவி பார்க்க வென்றெழுதாமலும் அல்லது முல்லைநில மாக்கள் பேரென்று சொல்லவந்தபோது கோவைசியர் பேரென்றெழுதாமலும் விதந்து சொன்னது என்னவென்று கேட்கின், விடை மேலெழுதப்படும். ஆனால், முக்கியமாக ஒரு ஞாயமிவ்விடத்தெழுதுகிறோம்.

அஃதியாதெனின், விதந்து கூறியதிற்கு ஞாயம் முன்பெழுதினதும், வேளாளரே சூத்திரர் அவர்களேமருதநிலமாக்களென்பதற்குப் பிராசீன வித்வசிரேஷ்டர்கள் புராணேதிகாசப் பிரபந்தங்களில் மருதநிலத்தார் வேளாளரேயெனச் சிறப்பித்திருக்கிறதும், மகாகவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பநாட்டாழ்வார் வேளாளர்மீது ஏரெழுபது என ஒரு பிரபந்தஞ்செய்து சிறப்பித் திருக்கின்றமையுமேயாம். ஆகையால், வேளாளரே மருதநில மாக்களென்பது சிதையாத சித்தாந்தமாம். இதுபற்றியே.

"காரானை ரணிவயலி லுழுதுதங்கள் கையாரநட்டமுடி திருநதிலித்தப்
பாராளுந் திறலரசர் கவித்த வெற்றிப் பசும்பொன்மணி முடிதிருந்துங் கலப்பை பூண்ட
வேராலெண் டிசைவிளக்கும் புகழ்வேளாளரோடிக்குஞ் சிறுகோலாற்றரணியாளச்
சீராகுமுடியரச ரிருந்து செங்கோல் செலுத்துவர்வேளாளர் புகழ் செப்பலாமோ"

என்று ஏரெழுபதில் கூறப்பட்டதென்க.

இங்ஙனமாய வுண்மைகளைச்சிறிதுமுணராத வருணசிந்தாமணியென்னும் நூலாசிரியர் வேளாளரைச் சூத்திரரென்று உண்மைகூறிய ஆறுமுக நாவலரவர்களையும் திருவிளையாடற் புராணம் அருளிச்செய்த பரஞ்சோதி முனிவரையும் வாளாகுறைகூறியிருப்பது அங்கீகரிக்கத் தக்கதன்றாம். அன்றியும், மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்து மாதாந்தப்பத்திரிகை யொன்றில் ஒருவர் என்று வேளிர் தலைப்பிட்டு வேளிரென்பார் வேளாளர் என்றும், அவர் யதுகுலதிலகரான கண்ணபிரானுடைய வமிசத்தாரென்றும், ஷை கண்ணபிரானுக்குப் பின்னிட்டுத் துவாரகையினின்றும் அகத்திய விருடியால் தக்ஷண தேயத்துக் கழைத்துவரப் பட்டார்களென்றும், இவர்களே க்ஷத்திரியரென்றும், ஆயர்களும் ஷை கண்ணபிரான் வம்மிசந்தான். இவர்களும் கூடவே

வந்தவர்கள்தாம். ஆனால் ஆயர்களிப்போது க்ஷத்திரியர்களென்றில்லாமல் கோவைசியராக விருக்கிறார்கள். இடையர்கள் அப்படியிருந்த போதிலும் வேளாளர்கள் க்ஷத்திரியர்களென்பதற்குப் பிரபலமான பிரமாணங்கள் நீடித்தகாலமாகச் சீரணித்து விட்டனவாயினும் சில நியாயங்களையுய்த்துணர்ந்தால் அவை தெரியவருமென்றும் சிலமயக்கப் பொருள்தரும போலியுதாரணங் கூறியிருப்பது விந்தையினும் விந்தையாம். ஏனெனின் பன்னூறாண்டுகட்கு முன்னரே புறச்சமயத்தராயுள்ள நிகண்டு நூலாசிரியர் வேளிர் என்னும் பதத்துக்கருத்தம் குறுநிலமன்னர் அல்லது குறும்பரசர் என்றுசொல்லியிருக்கவும், பெரியபுராண மருளிய சேக்கிழார் வேளாளராயிருந்தும் அணுவளவும் பிசகாது உள்ளபடியே தமது மரபினராகிய வேளாளர்களைச் சூத்திரரென்று வியக்தமாகக் கூறியிருக்கவும் இவர் வேளாளர் க்ஷத்திரியராவரென்பதுஒருபோதும் பொருந்தாது. அன்றியுமிவர் இடையர்கள் யதுகுலதிலகரான கண்ணபிரானுடைய வம்மிசத்தாரென்று கூசாமலெழுதியிருத்தலும், விந்தையாம். யாதவகுல சிரேஷ்டரான கிருஷ்ணபகவானும் இடையர்களும் தம்முள் வேறு பட்டவரெனப்பாரதம், பாகவதமுதலான நூல்களில் கூறியிருத்தலையிவர்தெரிந்திலர்போலும். தெரிந்துஞ்சாமர்த்தியத்தால் எழுதினாரென்றால் இல்லாததில் மனதைப்புகுத்தி யுழைப்பதில் பயனென்ன? ஒருவேளை இடையர்களிப்போது கொஞ்சகாலமாகத் தங்களை யாதவர்களென்று வழங்கிவருவதால் எழுதியது சரியென்னின், யாதவர்கள்யாரென்று சிறிது விசாரித்துப் பார்த்தால் யாதவர்வேறு இடையர் வேறு என்று இலகுவில் தெரிந்துகொள்ளலாம். அதுவருமாறு:

பெரியபுராணம் "யாத வன்றுவ ரைக்கிறை யாகிய மாதவன்முடி மேலடி வைத்தவன்" என்று கூறுவதும், பாகவதத்தில் கிருஷ்ணன் சூரசேனனது குமாரனாகிய வசுதேவனுக்குப் புத்திரனாகத் தேவகிதேவி வயிற்றினுற்பவித்துக் கம்சனிம்சையால், அசோதைகாந்தனை நந்தகோபனென்கிற ஆயர்கள் தலைவன்பால் பாலன்போல்

இடைச் சிறுவர்களுடன் பலராம சகிதனுகப் பல அற்புதச் செயல்களுடன் பசுக்கூட்டங்களை மேய்த்துசசிறிது காலஞ் சென்றபின் கம்சசம்ஹாரம் செய்து பந்துக்களுடன் இராச்சியாதிகாரம் வகித்துப் பாண்டவர்கள் சகாயனுக விருந்தானென விருப்பதும், இன்னும் அநேக நூல்களில் சாங்கோபாங்கமாக இவ்வாறிருப்பதும் வெளிப்படையாம். அங்ஙனமாக, இடையர்கள் யாதவகுல கிருஷ்ணவம்மிசத்தாரென்று எப்படி சொல்லலாம்? ஆனால், கிருஷ்ணன் புணர்ந்த கோபிகாஸ்திரீகளின் புத்திர பரம்பரையாக இடையர்களைக் கூறலாமெனின் கண்ணன் கோபிகாஸ்திரீகளுடன பிரியனுகவிருககு முன்னரே இடைச் சிறுவர்களுடன் தான் பசுமேய்த்தலானும், அநேக இடையர்கள் தத்தங்குலஸ்ரீகளை வேட்டுச் சந்ததியின் அபிவிருத்தி யடைந்திருப்பதாலும், இன்னுங்கண்ணன் பிரசுதாவனத்துள்ள ஆயர்களைத்தவிர வேறிடத்துள்ள ஆயர்களுடன சம்பந்தங்கொள்ளுமையாலும் பூர்வமுதல் இதுவரையில் ஆயர்கள் ஒருசாதியாராய் முல்லை நிலத்துக்குரியவர்களாயுமிருத்தலாலும் அவர்களை கிருஷ்ணபகவானுடைய வமிசத்தாரென்று சொல்வது கூடாது. இந்த இடையர்களைப்பற்றி இப்புத்தகத்தில் மற்றொரிடத்தில் எழுதியிருப்பதால் மீண்டு விரித்தெழுதுவது அவசியமன்றென இவ்வளவோடு விட்டாம்.

பாரதம் ஆதிபருவம் திரௌபதி
மாலையிடு சருக்கம்.

இந்தக் குரிசில் யதுகுலத்துக் கெல்லாந் திலக மெனுமாறு, வந்துற் பவித்துப் பொதுவருடன் வளருங் கள்ள மாமாயன், முந்தக் கஞ்ச மாம னுயிர் முடித்தானிவற்கு முனிஊர்தி, அந்தப் புரத்தி லாராம மந்தப் புரத்துக் கராமம்.

என்று கூறுவதிங் கறியத்தக்கதாம்.

VI. வேளாளர் வைசியரல்லரென்பது.

இனித்தொழுவூர் வேலாயுத முதலியாரெழுதி வெளியிட்டுள்ள வேளாண்மரபிய லென்னும் புத்தகத்தில் வேளாள

ரென்னும் பதத்துக்குள்ள அருத்த விசேஷத்தாலே வேளாளர்கள் மூன்றுமரபினராகிய வைசியர்களே யல்லது சூத்திரரல்லரென்றெழுதிய நியாயங்களும் அங்கீகரிக்கத்தக்கனவன்றென்பதை விவேகிகள் பார்த்துச் சரியென்று ஒப்புக்கொள்ளும்படி வேளாளர் சூத்திரரேயல்லது, வைசியரல்லரென்பதுபற்றிச் சிறிதெழுதுவாம். வேளாண் மரபியலிலுள்ள நான்கு வருணங்களின் உற்பவம் தொழில் முதலிய சர்வ விஷயங்களும் உடன்படக்கூடியனவேயாம்; ஆனால், அதில் சூத்திரர்களுக்குச் சொல்லிய விதிகளுஞ் சரியேயாயினும் அவர் சூத்திரரென்னும் பதம் வேளாளரைக் குறிப்பிக்கின்றதென்றுபயோகிக்காமலும், அவர் வேறோர் ஜாதி யெனக் கூறாமலும், இன்னார்தாமென்று நிரூபியாமலும் மவுனம் சாதித்தனர். ஷை புத்தகத்தில் நமக்கு ஆட்சேபமெல்லாம் வேளாளர் வைசியரென்றதனாலும் இன்னுஞ் சிறிது காரணங்களாலுமாம். ஆகையால் அதன் விபரத்தைச சுருக்கமாக வெழுதி வேளாளர் சூத்திரரென்றே நிரூபிப்பாம்.

1-வது புறமதத்தாராகிய சையினர்கள் செயத நிகண்டு: வருணாசிரம ஒழுக்கங்களுக்கும், பெயர் தொழில் முதலான காரியஙகளுககும், முக்கியசாக்ஷியென்று ஷை மரபியலின பத்தாவது பக்கத்திலெழுதப் பட்டிருக்கிறது.

2-வது வேளாள ரென்ற பதத்திற்கு, நிகண்டு அகராதியின்படி சாதாரணமாகப் பயிர்செய்தல் தானஞ் செய்தல் என்ற இவ்விரண்டினும் அகராதியின்படியுள்ள தானஞ் செயதல் காரணமாக வேளாளர் வைசியரென்பதே சரியெனறும்,

3-வது சூத்திரர் தானஞ்செய்ய அருக ரல்லாமையால் வேளாளர் தானஞ்செயலால் வேளாளர் சூத்திரால்லரென்றும்,

4-வது வேளாளர் சூத்திரரானால் சங்கப்பலகையில் இருத்தல் கூடுமோ? சஙகத்திருந்தமையால் வேளாளர் சூத்திரால்லரென்றும்,

5-வது வேளாளருக்கு அக்காலத்தில் சில உரிமை காரணமாகக் கிழாரென்னும் பட்டப்பெயர் வழங்கினமை யாக விருந்தாலும் அது சிறப்பன்று, கொடைகாரணமாக வழங்கினதாகிறது சிறப்பென்றும், இவைபோல இன்னுஞ் சில போலிநியாயங்களைக் கொண்டும் வேளாளர் சூத்திரரல்லர் வைசியரென்றும், இவர்கள் சில விடங்களில் பிள்ளையென்றும், சில விடங்களில் முதலியென்றும், சில விடங்களில் வெள்ளாஞ் செட்டியென்றும் வழங்கப்படுகிறார்கள் என்றும் (1880-ம் வருஷத்தில் அச்சுப்புத்தக ரூபமாக வெளியிட்டுள்ள அதில்) கூறப்பட்டிருக்கின்றன. ஆகையால் அதன்போலி ஞாயத்தை எடுத்துக்காட்டி வேளாளர்கள் சதுர்த்தர்களென்று மேதாவிகள் சொல்லியிருப்பதை விசிதப்படுத்துவாம்.

1-வது சாதிக்கிரமங்கள் தெரிவதற்கு நிகண்டு அகராதி முக்கிய சாக்ஷியென்பதற்கு யாதொரு தடையுமில்லை. அது எல்லாரு மொப்புகொள்ளக் கூடியதுதான். அதனை ஒப்புக் கொண்டுதான் சகல சாதியாரும் நாளது வரையில் பூர்வ வழக்கத்திற்கு விரோதமில்லாமல் இருக்கின்றனர். அப்படி பூர்வ வழக்கத்திற்கு விரோதமானவரைக் கண்டித்தற்கு வேண்டிய நூல்களும் எழுதுபவர்களுக் காதாரமாக விருந்து நிகழ்வதென்பதற்கணுவளவும் ஆட்சேபமில்லை. ஆனாலிப் போது சிறிது காலத்துக்குள் யாரோ மேனூல் தெரியாதவராய் நிகண்டில் மாறுபாடுசெய்ய அதுவழியாக அகராதிகளுஞ் சிறிது பேதித்திருக்கின்றன. இவ்விஷயம் மற்றோரிடத்திலெழுதியிருப்பதாலீண்டு விரிக்கிலம். ஆகையால் பழைமையாயுள்ள சுத்தமானநிகண்டகராதியை ஒப்புக்கொள்வதற் காட்சேப மில்லை.

2-வது வேளாள ரென்னும் பதத்திற்கு நிகண்டகராதிகளின்படி பயிர்செய்தல்தானஞ் செயதலென்னு மிரண்டர்த்தங்களுள் அகராதியின்படி தானஞ்செய்தல் காரணமாக வேளாளர்வைசியரென்பதேசரியென வெழுதிய ஞாயமெத்தன்மைத்தாம்? இதனை விவேகிகள் யூகித்தல் வேண்டும்.

பதங்கள் வெளியாக இலகுவில்தெரியும்பொருட்டு முன் ருத்திர ரூபமாய்த் திவாகரமிருந்ததென்றும், அது*மன னமாகக் மாணாக்கர்களுக்கிசையவில்லை யென்று பாவடிவாக நிகண்டு செய்யப்பட்டதென்றும், அவ்விரு நூலிலுள்ள சொற்களை அகரமுதலிய வரிசையாக வெழுதிப் பயன்படு த்தினது அகராதியென்றுஞ் சொல்வதே யொழிய ஒருபத த்திற்கு அருத்தம் நிகண்டு திவாகரங்களிலில்லாது அகராதி யிலிராதெனபது பிரசித்தம். ஆகையால், இவர் நிகண்டின்படி யென்றும், அகராதியின்படி யென்றும், விதந்தது பயனற்ற தாம். அதிலும் சாதாரணமாக என்றாரே விசேஷம் என்ன? அதையும எழுதினாலன்றோ தெரியும்.

நிகண்டகராதி திவாகரங்களில்

வெள்ளாட்டி-ஏவற்பெண்
வெள்ளாண்மை-கிருஷி
வெள்ளாளர்-மருதநில மாக்கள்
வேளாண்மை-ஈகை-மெய்ம்மை
வேளாண்மைமாந்தர்-வேளாளர்
வேளான்-குயவர்-வேளாளரிலோர் பகுதியார்
வேள்-ஆசை-ஆண்மகன், உபகாரம், மண், மன்மதன்

இங்ஙனமான மேலெழுதியுள்ள பதங்களுக்கு அர்த்தம் இருப்பதைப்பார்த்தால் வேளாளர் வைசியராவதற்கான பதம் புலப்படவில்லை. வேளாண்மை யென்பதன் பொருள் ஈகை உபகார மென்னு மிரண்டு பகுத்தால் தானமென்றுவைத்து அதுகொண்டு வைசியராவ தெப்படி? தானமெனனும் பதம் வைசியரா? அல்லது தானம் வைசியருக்கு முக்கிய தொழிலா? அப்படி முக்கிய மாக அஃதாவது மற்றோருக்கின்றி யிவர்க்கே சுதந்தரமாக விருக்கும்பக்ஷத்தில் பொற்றொடி தாழ்குழல் என்பதுபோல் தானம் அல்லது தானஞ் செய்வோரென்ற மாத்திரத்தே யோகமாகவேனும் ரூடியாகவேனும் அல்லது யோகரூடியாக வேனும் வைசியர் என்பதாகும். அப்படியில்லையே. அதிலும் தானம் அஃதாவது, அவர்சொல்கிறபடி கொடை நான்கு

வருணங்கட்கேயன்றிப் பிரஜைகள் யாவருக்கும் பொது வென்றும் அரசருக்குமட்டுஞ் சிறப்பென்றும் இன்னொருவிடத்தில் எழுதியிருப்பதாலீண்டு விரிக்கிலம். நிற்க, ஒருவாற்றானும் வேளாளரென்னும் பதம் வைசிய ரென்றுவருதுகூடாது. பின்னை வேளாள ரென்பதென்னை யெனின், அவர் புத்தகத்தும் பயிர்செய்தலால், வேளாள ரென்பதொக்குமென்றிருப்பதாலும், வெள்ளாண்மை இருவழி யென்பதனுலும், வெள்ளாண்மை யென்பது முதனீண்டு வேளாண்மை யென்றுயது இலக்கண விரோத மன்மையாலும் அதனையுடையார் வேளாளர் என்பதே சரியாம். அல்லது, இவ்வுலகத்தில் யாவரும் வெள்ளாளரென வழங்குவதுண்மை வழக்காதலாலும், புராணேதிகாச முதலிய நூல்களின்படி இவர்கள் மேல்மூவருணத்தார்க்கும் ஏவலாளராகையாலும், வெள்ளாட்டி - ஏவற்பெண் என்று அகராதியிலே யிருத்தலாலும், வெள்ளாட்டி என்பது ஏவற்பெண் என்றிருப்பது பெண்பாலைக்குறித்தவகையால் ஆண்பாற்பதத்திற்கு வெள்ளாளரென ஏவலாண்பாலைக்குறிக்க வேண்டும் பதமிருக்க வேண்டிய தவசியமாகையாலும் வெள்ளாளரென்பதும் சரியாம். ஆகையால் வேளாளர் வெள்ளாளரென்பதும் சரியாம். அல்லது வேளாள ரென்பது முதல் குறுகி ஒற்றிரட்டி வெள்ளாள ரென்றுனதோ, அல்லது மூன்குறித்தபடி வெள்ளாள ரென்றது முதனீண்டொற்றுக் கெட்டு வேளாள ரென்றுனதோ வெனின், உள்ளபடியே ஏவல் சம்பந்தமாக வெள்ளாள ரென்றும், பயிர்சம்பந்தமாக வேளாளரென்றும், உலகம் உண்மையாக உள்ளபடி வழங்குகிறதேயன்றி வேறல்ல. ஆகையால் மேலெழுதிய நியாயங்களின் படி இவர்கள் சூத்திரர் அஃதாவது நான்காவது வருணத்தார்களேயன்றி மூன்றுவது வருணத்தாராகிய வைசியரல்லரென்க. அன்றியும், இப்புத்தகத்தும் வேளாண்மரபியலென்னும் புத்தகத்தும் உதாகரித்த ஏழுபது செய்யுளால்.

'கிறைக்குரிய வந்தணர்க ளைதிபரவ மனுவிளங்கத் தறைக்குறிய காரானர்.'

என்றபடி இவர்கள் மருதநிலமாக்க ளென்பது மறிக. அதனாலன்றோ யிவர்களுக்குப்பிள்ளை யென்னும் சாதிப்பட்டப் பெயரும் வழங்கிவருகிறது. ஆனாலிவர்களுக்குக் கிழாரென்று வழங்கின தாகவும் தெரிய வருகிறது.

ஆனாலிந்தக்கிழாரென்றபெய ரக்காலத்தில் நிலவுரிமையாக வழங்கின தென்றாலும் கொடைகாரணமாக வழங்கின தாகக்கொள்வது சிறப்பா மெனவெழுதியிருக்கிறார். கொடையைப்பற்றி வேறோரிடத்தி லெழுதுவதாகச் சொல்லியிருப்பதா லதைநிறுத்தி நிலவுரிமை காரணமாக வழங்கியிருக்கின்ற தென்பதுமல்ல வெனக்காட்டுகின்றாம். எப்படியென்றால் இவ்வேளாளர்கள் மேன்மூவருணத்தார்க்கும் ஏவல் செய்வதென்பதுடன் உலகத்தில் பிரதம மாகவுள்ள நான்கு வருணங்களிலு மிவர்கள் கடைசியான நான்காம் வருணத்தவர்களான சதுர்த்தர்களாகையால் மூவருக்கும் கீழாரென்பதைத் தெரிவிக்க விவர்களைக் கீழாரென்று வழங்கி யிருக்கலாம். அது முதல்குறுகிக்கிழாரென்று வழங்கிவந்ததுஞ் சரியே. அல்லது அவர்கள் சொல்லுகிறபடிகிழையாரென்பது கிழாரெனவழங்கின வென்பதெவ்வளவும் சரியல்ல. அன்றியும்கிழையார் கிழாரென்றாவதிற்கான இலக்கண விரிவினும் கீழார் கிழாரென்றாவது சுலபமாம்.

இனி உழவுத்தொழிலை ஓரிடத்தில் சிறப்பித்தும், ஓரிடத்தில் தாழ்த்தியும் தாழ்ந்த விடங்கொண்டு கொடைகாரணமாக வேளாளரென்கிறார். புகழ்ந்த விடங்கொண்டு பயிர்செய்தல் காரணமாக வேளாள ரென்கிறார். ஆனால் உழவுத்தொழில் சிறப்புடையதே யன்றி, இகழ்ச்சியுடையதன்றென்பது சொல்லாமலே விளங்கும். எங்ஙன மெனின்.

"மேழிச்செல்வங் கோழைபடாது"
"நெற்பயிர்விளை"
"சீரைத்தேடி னேரைத்தேடு"

என்னும் பிரயோகமும், திருக்குறளில்

"உழவினார் கைமடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை"

“ உழுவா ருலகத்தார்க் காணி யஃதாற்ரு
தெழுவாரை யெல்லாம் பொறுத்து”

“ உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்”

என்றுள்ளனவும், பிறவும் சான்ருகும்.

இனிச் சூத்திரர் தானஞ்செய்ய அருகரல்லர்; வேளாளர் தானஞ்செய்திருத்தலால் அவர் வைசியர் என்கிருர். வேளாளர் சூத்திரரென்பதுபற்றி விளக்கமாக முன்னரே எழுதப்பட்டிருக்கின்றது. வேளாளர் மீது கம்பர் ஏரெழுபதென்னும் பிரபந்தம் பாடியிருப்பதிலும், வேளாளர் சார்பாகவுள்ள தொண்டமண்டல சதகத்திலும், வேளாளர்கள் தானஞ் செய்திருப்பதுபற்றிச் சிறப்பித்துச் சொல்லியிருப்பதில் அவரைச் சூத்திரரென்றே புகழ்ந்திருப்பது தெரிந்தும் தானஞ் செய்தது கொண்டு அவர் வைசியரென்றது வியப்பேயாம்! எங்ஙனமெனின், இவர் தமது புத்தகத் ததாகரித்த காளத்தி புராணம வருணச்சிரம தருமமுரைத்த அத்தியாயம் 31 - வது கவியில் “நாந்தி விதியினிட்டி யன்னதை யறத்தினீதல்” என்றிருப்பது சூத்திரர்க்கா? வைசியர்க்கா?

அதுவேயுமன்றித் திருக்குறளின் ஈகை, ஒப்புரவறிதல் என்னும் அதிகாரஙகள் பொதுவா?

அல்லது, வைசியர்களுக்குமாத்திரமா?

“ நல்லாறெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று”

“ ஊருணி நீர்நிறைந் தற்றே வுலகவாம்
பேரறி வாளன் றிரு”

என்பன வற்றை யுய்த்துணர்ந்தால் அவற்றில் தானம் நான்கு வருணத்தார்கட்கும் பொதுவென விளங்குகின்றதே

யன்றிச் சூத்திரர்கள் அது செய்யக்கூடாதென்ன விளங்கவில்லை; ஆனால் தானஞ்செய்பவன் சற்பாத்திரமறிந்து செய்யவும் ஏற்பவன் சாதுவாயிருக்கவும் வேண்டுமென நூல்கள் விதிக்கின்றன; ஆகையால், சதுர்வருணத்தாருந் தானஞ்செய்யலாம்; ஆகவே, அதுகொண்டு வேளாளர் வைசியரென்பது பொருந்தாது, பொருந்தாது.

வைசியர்களுக்குக் கொடை முக்கிய மென்றும், வேள் என்னும் பகுதிப் பொருளால் வேளாள ரென்பது காரணப் பெயரென்றும், அவற்றால் அவர்கள் வைசியர்க ளென்றும் சொல்வது பொருந்தாது. எங்ஙனமெனின்; கொடை (கொடை, தானம், ஈகை, உபகாரமென்பன ஒரு பொருள் தருஞ் சொற்கள்) எல்லாருக்கும் பொதுவாகவும், அரசர்களுக்குச் சிறப்பாகவும் இருத்தலால் வைசியர்களுக்குக் கொடை முக்கியமன்றாம். எங்ஙனமெனின்; நான்கு வருணங்களின் உற்பவம், பெயர், தொழில், தாரதம்மியங்களை விளக்கிக் காட்டுகிற திவாகரம், நிகண்டு, புராணம், இதிகாசம் முதலிய நூல்கள் அரசர்களுக்குக் கொடைசிறப்பென்றும், மற்றவர்களுக்கும் பொதுவென்றும் கூறுகின்றனவென்று முன இப்புத்தகத்தி லெழுதியிருந்த போதிலும் அதை மீண்டும் சுட்டிக்காட்டுதும். திவாகரத்தில் "பொறை நீரப் பெருப்பார் புறத்த லீதல்" என்றும், பகவத்கீதையில் ' தலைமைபுங் கொடையொடு தறுக ணாண்மையும்" என்றும், காளத்தி புராணத்தில் "முடிமிடை வேந்தர் செய்தி" என்னுங் கவியின் இரண்டாமடியில் "கொடைபுரிந்திடுதல்" என்றும் இவைபோல் பிறவுமிருத்தலால், அரசருக்குக் கொடை முக்கிய மென்பது செவ்வனேவிளங்கும். அன்றியும், திருக்குறள் இறைமாட்சி அதிகாரத்தில்

" அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

" கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி".

என்றிருத்தலால் அரசர்களுக்குக் கொடை சிறப்பாக இருத்தலறிக.

இனிப்பொதுவாக நான்கு வருணங்களுக்குங் கொடை (தானம், ஈகை, உபகாரம்) உண்டென்பது

" பெருங்கொடையான் பேணன் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்" என்றும்,

" ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி" என்றும்,

" ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை" என்றும்,

" உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லை கெடும்" என்றும்,

" தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு" என்றும்

திருக்குறள் கூறுவதால் நன்கு விளங்கும்.

ஆகவே, ஈகை உபகாரமென்பன சமயம்போல் கொடையென்றாகுமாகையால், இது நான்கு வருணங்கட்கும் பொதுவாகவும் அரசர்களுக்குச் சிறப்பாகவு மிருத்தல் விதியேயன்றி வைசியர்களுக்கு அத்தனை சிறப்பாக விருத்தலின்று. திருவிளையாடலில் "சொல்லினு மிலாபங் கொள்வார் தொன்மரபிருக்கை சொல்வாம்" என்றும், சதகங்களில் " வணிகருக் காதாயமேனிளைவு" என்றும் சொல்லியிருப்பதால் வணிகருக்குக் கொடை முக்கியமன்றாம்; ஆனதால், இதுகொண்டு வேளாளர் வைசியராக மாட்டார்களென்பதறிக.

இனி மதுரையிலுள்ள தெய்வத்தன்மை பொருந்திய சங்கப்பலகையில் வேளாளர் வீற்றிருந்ததால் அவர்கள் வைசியர்கள் என்கிறார். மரபியல் புத்தகத்தை யெழுதினவரது கருத்து சூத்திரர்கள் மேற்படி சங்கப்பலகையிலிருத்தல் கூடா

தென்பதுபோலும். மதுரையில் கடைச்சங்கத்தி லிருந்த புலவர்கள் நாற்பத் தொன்பதின்மரும் (வேளாளராகிய) ஒரே சாதியரா யில்லாமல் பல சாதியார்களாக இருந்தார்களென்பதை இவரறியவில்லைபோலும்! நக்கீரர்என்பவர் நெய்தனிலமாக்களில் சங்கறுப்போராக விருந்தும் ஷை பலகையிலிருந்தார். சங்கப்பலகையில் சூத்திரருக்குங் கீழானவர்களுமிருக்கச் சூத்திரரிருத்தல் கூடாதென்ற தென்னை? சங்கப்பலகையிலிருந்தது கொண்டு வேளாளர் சூத்திரரல்லர்; வைசியர்களதாமென்பது ஆலையில்லாவூருக்கு இலுப்பைப்பூ சர்க்கரையென்பதொக்கும். நக்கீரர் சூத்திரருக்குக் கீழ்ப்பட்டவராகிய நெய்தனிலமாக்களில் சங்கறுப்பவரா? அல்லது வேளாளரா? என்றறிந்துகொள்வ தாவசியகமாம்-அதன் விபரம் வருமாறு:—

நெய்தனிலமாக்கள் தோணி யோட்டுதல், மீன்பிடித்தல், முத்துச்சங்குக் குளித்தல், அதனைப் பண் படுத்தல் முதலிய தொழிலையுடையவர்கள். அவர்கள் சூத்திரருக்குத்தாழ்ந்தவர்களென்பதைப் பல நூல்களிலுங் காணலாம்; ஆயினும் அதனைச் சுருக்கமாகக் காட்டுதும்:—

நாலடியாரில் "தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக், காணிற் கடைப்பட்டா னென்றிகழார் - காணாய், அவன்றுணையா வாறுபோ லற்றேநூல் கற்ற, மகன்றுணையா நல்ல கொளல்" என்றிருப்பதும், இராமயணத்தில் "ஏழை வேடனுக் கெம்பின் றம்பிநின் தோழன்" என்றதை ஆத்திசூடியில் "இழிவோராயினுந் தாழ்வுரை" என்பதற்கு உதாரணஞ் சொல்லியிருப்பது மறிக. அன்றியும், பாரதத்தில் "தாசர்தஙகுலத்து" என்றிருப்பதாலும் பிறவாற்றாலும் நெய்த னிலத்தார் சூத்திருக்குங் கீழானோ ரென்பது நன்கு விளங்கும். அன்றியும் "கொங்கு தேர்வாழ்க்கை" என்னுஞ் செய்யுளுக்கு நக்கீரர் குற்றஞ்சொல்ல,சொக்கநாதர்(தாம் தருமிக்குப் பாடிக்கொடுத்த ஷை செய்யுளில் குற்றஞ்சொன்ன) ஷை நக்கீரரைப் பார்த்து

"அங்கங் குலுங்க வரிவாளி னெய்பூசி
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச்-சங்கதனைக்
கீருகீ ரென்றறுக்குங் கீரனோ நங்கவியை
யாராயு முள்ளத் தவன்."

என்னும் இவ்வெண்பாவால் வினாயதற்கு, அவர்

"சங்கறுப்ப தெங்கள்குலஞ் சங்கரனார்க் கேதுகுலம்
பங்கமறச் சொன்னால் பழுதாமோ—சங்கை
யரிந்துண்டு வாழ்வோ மரனே நின்போல
விரந்துண்டு வாழ்வ தில்லை"

என்று கூறியிருப்பதில் தம் மட்டிலுமல்லாமல்தங்கள் குலமும் சங்கறுப்ப தென்பது தோன்ற எங்கள்குலமெனப் பன்மையாகச்சொல்லியிருப்பதால் நக்கீரர் நெய்த னிலமாக்க ளில் சங்கறுக்குங் குலத்தாரென்பது நன்குவிளங்குகின்றது இந்தச் சங்கறுப்போரைநிகண்டில்மக்கட்பெயர்த் தொகுதியில சூத்திரருக்குங்கீழ் 18 - 24வதாகச் சொல்லியிருப்பதுங் காண லாம். இதனால், சூத்திரனுந்தாழ்ந்தசாதியாரும்கற்றவிற்பன்ன ரானால் சங்கப் பலகையில் இருத்தல் கூடுமென்பது விசிதமா கிறது; ஆகவே. வேளாளர் சங்கப் பலகையிலிருந்ததுகொண்டு வைசியர்களென்பது ஒரு போதும் கூடாதென்க.

இனி வேளாள ரென்னும் பதம் கொடை முக்கியத்தால் வைசியர்களுக்குச் சாதிப் பெயராயிருந்தால் நூலாசிரியர்கள் வைசியரைக் குறிப்பிட வந்த சமயந்தோறும் ௸ வேளாள ரென்னும் பதத்தை வழங்கி யிருப்பார்களல்லவா? அப்படி யெந்த நூலிலாவது வழங்கப்பட்டிருக்கின்றதா ? இல்லையே. ௸ நூலாசிரியர்கள் ௸ வைசியர்களைச சொல்ல வேண்டிய போது விசேஷமாக வணிகர்களென்றும், வைசியர்களென் றும், சிறுபான்மை நாய்க்கர் பரதர் எட்டியர் இப்பரென்றும், வைசியர்களுக் கேற்பட்ட பேராலாயே வழங்கியிருப்பது பெரியபுராணம் திருவிளையாடல் காசிகாண்டம் முதலிய நூல் களில் பரக்கக் காணலாம். இதுபோன்று சூத்திரர்களைச் சொல் லும்போது விசேடமாக வேளாண்மாந்த ரென்றும், சதுர்த்தர்

உழவர் பின்னவரென்றும்; நாலாவதார் கடைஞர் வினைஞரென்றும் சூத்திரர்களுக் கேற்பட்ட பேர்களாலேயே வழங்கியிருப்பதும் ஷெ நூல்களில் ஏராளமாகக் காணலாம். அப்படியிருக்க, மரபியல் புத்தகம் எழுதினவர் தம்மவர் வைசியரென்று குறிப்பிடவந்தபோது வைசியரென்னும் பதமுள்ள சூத்திரங்கள்செய்யுட்கள் உதாகரித்தனரே தவிர, வேளாளர் வைசியர்என்பதைக் குறிப்பிடும் பதத்தை எங்கேனும் உதாகரித்திருக்கின்றனரா? இல்லை. ஆனால், சூத்திரர்களைக் குறிப்பிடவந்தபோது வேளாள ரென்னும் பதமுள்ள சூத்திரம் கவிகளெத்தனையோ விருக்க, அவற்றைமறைத்து அப்பதமில்லாத சூத்திரர் சதுர்த்தர் பின்னவர் என்றற்றொடக்கத்துப் பதங்களுள்ள சூத்திரமுதலியவற்றைஉதாகரித்திருக்கிறார் வேளாளரென்னும்பதமில்லாத சூத்திர முதலியவற்றை உதாகரித்து அதனால் வேளாளராகிய தாங்கள் சூத்திரரல்ல வைசியரென எழுதி யிருக்கிறார். வேளாளர் சூத்திரரே யென்றுகாட்டக் கூடியதாக வேளாள ரென்னும் பதமுள்ள சூத்திரங்கள், கவிகள் இப்புத்தகத்தில் முன்னரே யெழுதப்பட்டிருக்கின்றன. அதனால் நன்குதெரிந்து கொள்ளலாம்.

மரபியல் புத்தகம். 64, 65, 66 வது பக்கங்களில் தெய்வம், கிருகம், பட்சி, மிருகர், விருட்சம், இராசி, இரத்தினமென்னு மிவற்றிற்குச சதுர்வருணம் சொல்லியிருப்பதில், (சூத்திரர் வேளாளரெனத் தெரியக்கூடியதா யிருப்பதை மறைத்து)வேளாளர் என்றபதம் இல்லாதது பார்த்து சொல்லியிருப்பதால் வேளாளர் என்னும் பதமுள்ள கவிகள் சூத்திரம் சில கண்டெழுதுகின்றோம்.*

அகஸ்தியர் பஞ்சபக்ஷிசாஸ்திரம் ஏழாவது அத்தியாயம் 3-வது கவி.

“வல்லூறு பார்ப்பான் வளராங்கை தான்வணிகன், செல்லாருங் காகம் செகத்தரசன்-நல்லாய் கேள், கோழியாம் வேளாளன் கூறுமயில் சண்டாளன், ஆழியாய் நூலாய்ந் தறி”

ஷை நான்காவது கவி.

"பொன்மறையோ னும்வலியன் போரார்ந்தை வேந்தனும்,
துன்னுமொழி காகம் துலைவணிகள்-மன்னும்,உழுகுலத்தோன்
கோழியே யோதுங்கான் மஞ்ஞை, இழிகுலத்தோ னென்றே
யிசை''.

இவ்வாறே சினேந்திரமாலை முதலிய வற்றிலிருப்பது மறிக. பாலர்கள் படிக்கிற வருஷப் பிறப்பில்

மேஷம்-வேளாளன்	ரிஷபம்-இடையன்
மிதுனம்-சக்கிலியன்	கடகம்-கன்னான்
சிங்கம்-பிராமணன்	கன்னி-நாவிதன்
துலாம்-செட்டி	விருச்சிகம்-வேடன்
தனுசு-தட்டான்	மகரம்-வண்ணான்
கும்பம்-குயவன்	மீனம்-பறையன்

ஆகராசி 12, சாதி 12 என்று இருப்பது மறிக.

அன்றியும், இலக்கண நூல் 7?-வது கவி "வேதியன்வேந்தன் வணிகன் வேளாள னென்னுமுறையே, ஓதுவர் வெண்பா வகவல் கலிவஞ்சி யொத்துவற்றின், பேரொனு மவ்வகையானே வருமென்பர்."

என்று கூறுவதுமறிக. புத்திசாலிகள் இதனுடனுண்மை தெரிந்து கொள்ளலாம்; பொறுமையுள்ள புத்திமான்களுக்கும் பொறுமை நீங்கினல் புலப்படும். மேலும், வேளாளரென்னும் பதத்தின் அர்த்தத்தாலேயே அவர் வைசிய ரென்கிறார். அப்பதம்சூத்திருக்கே யன்றி வைசியர்க் கல்லவென்பது இதுகாறுமெழுதியசொற்ப நியாயத்தாலேயே பெறப்பட்டது. வேளாளர் சூத்திரரென்றே நிரூபித்திருக்கின்றோம். இன்னும் ஷை முதலியார் ஷை புத்தகத்தில் தமது சார்பாக வெழுதிய திருக்கைவழக்கம் ஒன்றையே நாடும் எழுதி அதில் அவர் திருத்தியிருத்தலையுங்காட்டி, அது வேளாளர் சூத்திரரென்பதாகவே விளக்கி யிருப்பதைச் சிறிதெழுதுவாம்.

உதாரணங்காட்ட வெழுதும்போது உள்ளபடி எழுத வேண்டுமேயன்றி, திருத்தி யெழுதுவது புத்திமான்களுக் கழகன்றாம்.

திருக்கைவழக்கத்தில் "அம்பொன்" வளைவாரி வையக மும் வானகமும் போற்ற,! மூளைவாரி வந்த முழுக்கை-கிளை வாழக் கச்சித்தலத் தரனைக் கல்லாலெறிய மறந், தெச்சிற்றயிர்ச் சோரெறிந்திடுங்கை - பச்சைமிகு, தேமாவடுக் கமரிற் சிந்தித் தேன்றே கழுத்தை,யாமாமெனவே யறிந்திடுங்கை-வாமமறை, ஓதுபுகழ் நாயனுட னூரன் புரமென்றே, மோதுதடி கொண்டு மூடுக்குங்கை - தீதகல, அஞ்செழுத்தே யொன்றாகி யப்பரொ னத்தோன்றியரன், செஞ்சரணத் தேபூசை செய்யுங்கை-வஞ் சியர்பால், தூதரனைத் தான் விடுத்த சுந்தரனைக் காணமற், பேதமறத் தன்வயிறு பீறுங்கை - பூதலத்தின்" என்றும்,

"கண்டளவில்,

"நீலி தனக்கஞ்சி நின்றவணி கேசனுக்கா
கோலி யபயங் கொடுக்குங்கை-யாலமெனும்" என்றும்,

"கடல்சூழ்ந்த

பார்பூட்டு மன்னர் பரிகரிபூட் டக்கதிரோன்
றேர்பூட்ட வேர்பூட்டுஞ் செம்பொற்கை-வீரமதன்
ஐங்கோனொடுக்க வணைகோ லெடுக்கவுழும்
பைங்கோல்பிடிக்கும் பதுமக்கை-இங்கிதமாஞ்,
சீர்படைத்த பூபாலர் செங்கோல் பிடிப்பதற்குப்
பேர்படைத்த மேழி பிடிக்குங்கை-கார்படைத்த,
மிஞ்சிமதிகீர்த்தியைப்போன்மேதினியெல்லாந்தழைக்கச்
செஞ்சாலி நாற்றைத் தெழிக்குங்கை - யெஞ்சாமல்
வெள்ளைக் களைகளைந்து வீறும் பயிர்தழைக்கக்
கள்ளக் களைகளைந்த கற்பகக்கை - வள்ளுறையும்
விற்போற் மதகரிப்போர் வெம்பரிப்போர் வெற்றிப்போர்
நெற்பொர்முதற்போர் நெரிந்திடுங்கை-கற்பகம்போல்"
என்றும்,

"மாமறையோர் மன்னர் வணிகர் முதலாகத்
தாமலையா மற்கொடுத்துத் தாங்குங்கை - தேமருவு" என்றும்,

"முன்னாள்
மனக்கவலை யுற்ற வணிகன்முன்னே நின்று
தனைக்கா வெனக்கேட்டதங்கக்கை-கலைக்கவே" என்றும்,

கூறியிருப்பன இப்புத்தகத்தில் முன்னரெழுதியதற்கொத்தே விளங்கும். இளையான் குடிமாற நாயனார் சரித்தாலும் விறன்மிண்டர், வாகீசர், கலிக்காமர் முதலிய வேளாண் குலத்து நாயன்மார்கள் சரிதத்தாலும் வேளாளர் மருத நிலமாக்களென்பது நன்குவிளங்கும். மேழிபிடிக்குங்கை,' களையெடுக்குங்கை, உழவுகோல் பிடிக்குங்கை, நாற்று நடுங்கை என்றற்றொடக்கத்தனவற்றால் மருதநிலத் தொழிற்சிறப்பும், மாமறையோர், மன்னர், வணிகர் என்னு மூவருணத்தார்க்குங் கொடுத்துத் தாங்குங்கை என்றதனா லிவர்கள் நாலாவது வருணத்தாரென்பதும், "நீலிதனக்கஞ்சி நின்றவணி கேசன்" எனவும் "மனக்கவலையுற்ற வணிகன்முன்னே" எனவும் இருப்பது கொண்டு வணிகர் வேறு வேளாளர் வேறு என்பதும் விளங்குவதறிக.

ஆனால் வேளாளர் சூத்திரரென்பதெங்ஙன மெனின் அது 'அப்பொனீடிய' வென்னும் செய்யுளாலும், 'இட்டவன் சிறை' என்றற்றொடக்கத்துச்செய்யுளாலும் வெளியாமென்க. இவர் இத்திருக்கை வழக்கத்தில் 'மாமறையோர் மன்னர் வணிகர் முதலாகத் தாமலையா மற்கொடுத்துத் தாங்குங்கை' என்றதை "மாமறையோர்மன்னரோடு வந்தடுத்த சூத்திரர்" என்றெழுதி முன்னால் மன்ன ரென்ற பதமும் பின்னால் சூத்திரரென்றபதமுமிருத்தி மத்தியில் வேண்டுவதாகிய வைசியரென்பதைமாற்றித்தாம்வைசியரென்றுசொல்ல வெழுதினதை விவேகிகள் யுய்த்துணர்வதுட னிவர் அறியாமையையும் அவசரத்தையு மறிந்துகொள்வார்கள். 'எங்ஙனமெனின்; 'நீலி

தனக்கஞ்சி நின்றவணிகேசன்' எனவும், 'மனக்கவலையுற்ற வணிகன் முன்னே' எனவு முள்ளவிரண்டடிகளில் வணிகேசன் வணிகன் என்னு மிரண்டுபதங்கள் மலைபோலிருக்க அவற்றையறியாதார்போல் மாமறையோர்என்னும் அடியில் வணிகரென்னும் பதத்தை மறைத்ததென்ன அவசரம்.? அன்றியும், ஷை திருக்கைவழக்கப் புத்தக மிவரிடமட்டுந் தானிருப்பதுபோ னினைத்ததும் ஆச்சரியமே! இவ்வா றென்றிற் புரட்டினவ ரின்னும் எதை யெதைத் தம்மனம்போல் திருத்தினரோ தெரியவில்லை. இவர் உதாகரித்தன வெல்லாம் பார்த்தால் அது தெரியவருமென்று நினைக்கிறேன். ஆனதால் புத்திசாலிகள் அப்பேர்ப்பட்ட மாறுதல்களைத் திருத்தி அநியாயத்தைக் கண்டித்தல் அவசியமாம்.

மாபியல்புத்தகம் 133, 134, 135 - வது பக்கங்களில் வேளாளரைச் சூத்திரரென்ற தப்புவழக்கிற்குக் காரண மென்றெழுதிக்கொண்டு சில நூற்றாண்டுகளாக ஆகம விரோதிகளாகிய மாயாவாதிகள் பிரவேசித்து ஆகமங்களை மறுத்துக் குலீனர்களாகிய குறும்பரசரைத் தமக்குத்துணையாகக்கொண்டு ஆதிசைவவேதியர்களைப் பூசாரியென்றும் அவர்கள் சார்பாயிருந்தவேளாளர்களைச் சூத்திரரென்றும் வழக்கத்துக்குக் கொண்டுவந்ததுமல்லாமல்வேதாந்த நூல்களிலும் புராணங்களிலுந் திருத்தினரென்றும்,பின்னுமிம் மாயாவாதிகளல்லாதபல சமயவாதிகளும்பாரதம் இராமாயணம்பதினெண்புராணமிருதிகள் அங்கநூல் உபநிடதங்கள் சுருதிமொழிகள் முதலியவெல்லா வற்றையும் தாம் வேண்டியவாறுமிகுத்துங் குறைத்தும் மாறுபடுத்தினரென்றும், அக்காலத்து மாத்திரமன்றிஇக்காலத்து மவ்வாறு செய்துவருதலைக் கண்டுள்ளா மெனவும் இம்மாறுபாடு எல்லாப் பாஷைகளிலுமுள்ளது என்செய்வாம்; வினைத்திறமிருந்தவாறு என்னே யென்றும் மிகவும் வியாகுலசித்தராயெழுதின இவர் ஷை புத்தகம் 80-பக்கத்தில் உலகமாதாவினிடத்தில் செல்பெற்றமைக்குச்சான்றுமெய்ம்மொழிப்

பொருளாகியகாஞ்சிப்புராணம் பெரியபுராணங்களிற் காணலா மென்றெழுதினதுடன் சேக்கிழார் புராணத்தில் உதாரண மாகச் சில செய்யுளுமெழுதியிருக்கின்றார். அன்றியும், அப்புத் தகத்தின் 23 - வது பக்கத்தில், மார்க்கண்டேய புராணம் 27-வதுபக்கத்தில், காளத்திப்புராணம் 32-வது பக்கத்தில், பகவற்கீதை 51-வதுபக்கத்தில், ஏரெழுபது 63-வது பக்கத் தில், புருஷசூக்தம் 64 - வது பக்கத்தில், சினேந்திரமாலை 66-வது பக்கத்தில், திருவிளையாடற்புராணம் நாலடி முதலி யனவு மின்னு மனேக விடங்களில் குறள் ஸ்மிருதி முதலி யனவு முதாரணமாக வெழுதியிருக்கின்றார்.

இவர் தமக்கு விரோதமாக நூல்களெல்லா மாறுபடுத் தியும் மிகுத்தும் குறைத்தும் இருக்கின்றன வென்றவர் மெய்ம்மொழிப் பொருளென்று பெரியபுராணம் காஞ்சிபுராண முதலானவற்றைப் புகழ்ந்ததும் தாமெழுதியவற்றிற் கேற்ற வுதாரணச் செய்யுள்களாக ஷ புராணமுதலியவற்றி லிருந் தெழுதியதும் ஆச்சரியமே !முன்ன ரொருவிதமாகச் சொன்ன வர் பின்னரவற்றிலிருந்தே உதாரணமும் காட்டியிருக்கின் றார். இவற்றுள், இவரது அபிப்பிராயப்படி மாறுதல் திருத் தல் முதலியன இருந்தால் இவருதாரணங் காட்ட வெழார். காட்டலால், மாறுதல் முதலியன வில்லையென்பது வெளிப்படையாம். ஆனலிவா ஷ புராண முதலியவற்றி னின்று முதாரணங் காட்ட வெழுதின கவிகள் சூத்தி ரங்களை அவற்றி லிருந்தபடியே எழுதியிருக்கின்றாரோ? அல் லது தமது கட்சிக்கேற்றவாறு மாறுதல் திருத்தல் முதலானவை செய்திருப்பாரோ வெப்படியோவெனச் சந்தேகங் கொள்வதற் குக் காரணம் திருக்கைவழக்கத்தில் மாற்றியதேயாம். நிற்க, இவர் மாயாவாதிகளாகிய ஆகமவிரோதிகள்,பல சமயவாதிகள் அவற்றை மாற்றினரென்பது வியர்த்தமாம்; ஏனெனின் இவர் ஒப்புக்கொண்டு உதாகரிப்பதால். இதனலிவர் புராணங்களை மறுக்கக்கடமைப் பட்டவரல்ல ரென்பது பெறப்படுதலால்இப் புத்தகத்தி னுதாரணமாக எழுதிய செய்புள்களையு மறுக்கக்கடவ

ரல்லராவர். ஆகையால் நாமெழுதிய வுதாரணச் செய்யுள்களாலும், பிறவாற்றாலும் வேளாளர்கள் வைசியர்களல்லவென்பதும் சூத்திரரே யென்பதும் வச்சிர லேபமாகப் பெறப்பட்டன. இதனால், நாம் உதாரணமாகவெழுதின கவிகளில் அனுபூதிலையுஞ் சந்தேகமில்லையென்ப துணரத்தக்கதாம். இவர் உதாரணமாகக் காட்டிய வெந்தச் செய்யுளிலும் வைசியர்களென்ற விடத்தில் வேளாளர்களென்னும் பதமே யில்லை. அவ்வாறிருக்க, 143-வது பக்கத்தில் இங்ஙனம்அம் மாயாவாதிகளது மருட்டி லகப்பட்ட நம்மவர்களி லனேகர் மயங்கி அவத்தைக்குட்பட்டுக் கருமநிலை கெட்டவர்களாய்ப் பல துன்பத்துக்குள் சிலகாலமாய் அழுந்திக்கிடத்தலினாலும், இன்னுமவ்வாறே மயங்கி அவதிப்படும்படியான எதுக்களே மென்மேலும் வளர்ந்துவருதலாலும், மேற்சொல்லியபடி முதலிலேயே இம்மாயாவாதிகள் சொல்லை "இளைதாக முண்மரங் கொல்க களையுநர், கைகொல்லுங் காழ்த்த விடத்து" என்றபடி செய்யாது அக்காலத்துட் சிறந்த அறிவினையுடைய பெரியோர்களும் அந்நாளிலிருந்த இழிகுலக் குறும்பரசர் முதலியோர் வேதையாலும் மற்று மதுபோன்ற சில காரணத்தாலும் சோர்வுற்றிருந்தபடியால் இப்போது பெரிய நஷ்டமாயும் அவ்வுண்மை வெளிப்படுத்துவது கஷ்டமாயு முடிந்திருப்பதுமன்றிக் சூத்திராதியாரால் புறன் பழிக்கப்படவும் நேர்ந்தது. ஆதலால் 'செற்றாரைச் செறுத்தலிற் றற்செய்கை சிறந்தன்று' என்று எழுதியிருக்கிறார். இதில் அம்மாயாவாதிகளென்றது யாவரைக்குறிக்கும்? முன்னர் இவர் நூல்களை மாற்றின மாயாவாதிகளென்று சொன்னவரைக் குறிக்கும். அப்படி சொன்னவர் அப்படி மாறுதலான புராணமுதலிய நூல்களைத் தவிர்த்து இப்போ இயற்றிய புராணமுதலியவற்றிலிருந்து உதாரணங் காட்டுதல் வேண்டும். அப்படியின்றி அவற்றையே ஒப்பிச்சொன்னவர் பிந்தி அவரைமாயாவாதிகளென்று சுட்டிச சொல்லலாமா? மாயாவாதிகள் யார்? பாரதம் இராமாயண முதலிய நூல்களில் 'மாறுதல் படுத்தி

யிருக்கிறதென்றும் கண்டுள்ளா மென்றும் சொன்னாரே. அப்படி எந்தப் புராணேதிகாச முதலியவற்றில் மாறுதல் இருத்தல் முதலியன செய்யப்பட்டிருக்கின்றன? இவர் கண்டவை யாவை? அவற்றை யெழுதிக் காட்டினாலன்றோ தெரியும்? நிற்க; மெய்ம்மொழிப் பொருளென்றொப்பிய பெரிய புராணத்தின் இளையான் குடிமாற நாயனார் புராணத்தில் "அம்போனீடிய"வென்ற செய்யுளில், பசுமரத்திலாணி யறைந்தாற் போல வேளாளரைச் சூத்திர ரென்று கூறியிருப்பதும், ளையவேளாண்குல நாயன்மார்கள் பன்னிருவர் புராணத்திலும உழவர் என்றற் றொடக்கத் தனவாகச் சூத்திரருக்கேற் பட்ட பெயர்களைக் கொண்டு வழங்கியிருப்பதும், ஷை திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்தில் "விழவின்மலி" என்ற செய்யுளில் வேளாளரை நான்காவது மரபினரென வருணனை செய்திருப்பதும், திருவிளையாடல் புராணத்தில் "வழுக்கறுவாயவை" "இட்டவன்சிறை யிடுக்கண்வந் துயிர்க்கு" என்றசெய்யுட்களாலே வேளாளர் நாலாவதாரென்று விளங்க சொல்லியிருப்பது தெரிந்தும் அந்நூல்களையே ஒப்பியும் அவற்றிலிருந்தெழுதியும் வந்தயிவரே மாயாவாதியாவர். மாயாவாதியென்பார் மாயையால் மயக்கப்பட்டுக் கலங்குபவரன்றோ? அன்றியும் உண்மைவெளிப்படுத்துவது கஷ்டமாயிருக்கிறதென்றும் சூத்திரர்களால் பழிக்கப்பட நேர்ந்ததென்றும் இவரெழுதியவைமாயாமயக்கேயாம். உண்மைசொல்லக் கஷ்டமிராது. இவர் போலில்லாததை நிறுத்த முயன்றால் கஷ்டந்தான். கஷ்டப்பட்டாலும் அது முடியாது. இவரே சூத்திரராக விருக்க, இவர்சூத்திரர்கள் பழிக்க நேர்ந்ததென்று விசனிப்பது விந்தையாகவிருக்கிறது! இவர்கருத்து, தாம் வைசியர், பிறர்சூத்திரரென்பதுபோலும்! அங்ஙனமாயின், சூத்திரர்யார்? அவர் இன்னாரெனக் குறிப்பிடலா மல்லவா? அங்ஙனங் குறிப்பிடாமையின் இவர் மரபினரே சூத்திரரென்பது தோற்றமாம். அச்சூத்திர மரபில் சனித்த ஸ்ரீ-ல-ஸ்ரீ யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலரவர்கள் முதலிய உத்தமசீலரும் கற்ற விற்பன்னர்களு

இவரையும் இவரெழுதிய நூலையும் இவரைப் போன்றவர்களையும் நன்கு மதிக்கவில்லையென்பதும் தேற்றமாம். அன்றியும் "இளைதாக முண்மரங்கொல்க" என்றபடி இவர் வேளாளர்சூத்திரரென்பதை மறுத்து அவரை வைசியராக்குவதெங்ஙனுமுடியாது. நாம்நிரூபித்த நூல்கள் யாவும் தமிழினுண்டாகி வெகுகாலமாயினவே; அவை உலோகமுள்ளளவுமிருக்குமே. அவைகளில் ஒரு அட்சரமேனும் சூரிய சந்திரர் திசை மாறினாலும் மாறாதே; ஆதலால் கண்டிப்பதெதனை; தாங்கள் எப்போதும் (திரிகாலத்து மென்றபடி) சதுர்த்தர்களாக விருக்க அதை மறந்து தாங்கள் வைசியராயிருந்த மான்மியத்தை நீக்கித் தங்களைச் சதுர்த்தர்களென்றாக்கினார் செற்றாரென்றுகூறிச் 'செற்றாரைச் செறுத்தல் ற்றற்செய்கை சிறந்தன்று" என்று எழுதினது வியப்பே! இவர் நியாயப்படி இல்லதுவராது உள்ளது போகாது என்ற கிரமத்தை மறந்து உள்ளதைப் போக்கவேண்டுமென்றும் (அஃதாவது சூத்திரரென்பதை நீக்கவேண்டுமென்றும்) இல்லாததைப் பொருத்தவேண்டுமென்றும் (அஃதாவது வைசியரென்பதைப் பொருத்தவேண்டுமென்றும்) கிரமத்தவறாகக் கூறுமிவரை யுலகத்தார் செறுக்க வேண்டியதாயிருக்க, இவர் உலகத்தாரைச் செறுத்தல் செய்ய வேண்டுமென்பது நியாய விரோதமாம். உலகம் தராசுபோல்வது; உள்ளதாவழுங்கும். ஆகையால் நியாயசீலர்கள் இப்புத்தகத்திலுள்ளவற்றைப் பார்வையிட்டுச் சீர்தூக்கிப் பட்சபாதமின்றி நடுவு நிலைமையைக் கைகொண்டு நூதனமாகத் தம்மை வைசியர்களெனறுகூறி அதற்கேற்கப்போலி நூல்களைக் கற்பிக்கின்றவர்களையே ஒறுத்தல் கடமையாம்.

மேலும், இவர் வேளாளர்களை வைசியராக்க முயல்வது தென்னாலிராமன் கறுப்புநாயை வெள்ளை நாயாக்கமுயன்றது போலாம். நிகண்டில் முன்பின்யோசியாது நூதனமாகப் "பூவைசியர்முப்பேருழவர் மேழியர்வேளாளர்' என்று கற்பித்த கற்பிதத்தைக் கொண்டு கவியின் உட்கருத்தை யோசியாது அறியாதாருட் சிலர் வேளாளரைப் பூவைசியரெனச் சொல்லு

தற்கேற்பச் சிலர் அகராதியினும் புகுத்தினர். அதைக்கண்டித்தெழுத ஒருவரு முயலாதிருந்தமைபற்றி மரபியல்வழுவினவர் பூவைசியரென்பது சித்தித்துவிடுமோ.

இவர் வேளாளர்கள் வைசியர்க ளென்பது பற்றித்தான் அவரது மான்மிய மெழுதினரெனச் சிலர் நினைக்கிறபடியிருக்கலா மென்றால், இவர்தமது புத்தகத்து 53 வது பக்கத்தில் சூடாமணி நிகண்டில், தனவைசியர் பூவைசியர் கோவைசியரென்றமை ஸ்மிருதிகளுக்கு விரோதமாக விருத்தலால் விசாரித்தறிய வேண்டுமென வெழுதி நிராகரித் திருப்பதாலவர்கருத்து வேறுபட்டதாமென்க.

நிகண்டிலுள்ள நூதன கற்பிதங்களைப்பற்றி இப்புத்தகத்தின் மற்றோரிடத்திற் கூறுவாம். இது போலவே கோவைசியரென்றபதமும், அகராதிகளில் முல்லை நிலமாக்களாகிய ஆயர்களுக்கு எழுதியிருத்தலால் அவர்களும் வைசியரோ வெனச் சிலர் நினைத்தல் கூடும். ஏனெனின், வைசியரின் தொழிலில் ஒன்றாகிய ஆனிரை யோம்பல் இடையர்களுக்கும் சொல்லப்படுவதால்! இடையர்கள் சதுர்வருணத்தாருடைய பசுக்களையும் மேய்த்துக் காத்தற்குரியரேயல்லது அவர்கள் வைசியரல்லர். அதை இப்புத்தகத்தி லெழுதவேண்டிய தென்னையெனின், இப்புத்தகத்தின் பெயர் வைசிய குலவிளக்கமாதலின், அதற்கேற்ப மூன்றாவது மரபாராகிய வைசியர்கள் இன்னாரெனத் தெரிவித்தல் காரணமாக நூதனமாகத் தம்மை வைசியர்களென்று சொல்லுகிறவர்களையும் அவ்வாறு புத்தகமெழுதுகிறவர்களையும் மறுத்து இன்னார் இன்ன மரபாரென்று தெரிவித்தல் கடமையாம். இவர்களைப்பற்றி மதுரைச் செந்தமிழ் மாதாந்தப் பத்திரிகை யொன்றில் ஆயர்களும் க்ஷத்திரியர்களே; ஆனால் அவர்களிப்போது கோவைசியராக விருக்கிறார்களென் றெழுதியதற்காகச் சுருக்கமாக இடையர்கள் முல்லை நிலமாக்களே யென்பதாக இப்புத்தகத்தி னோரிடத்தில் எழுதியிருப்பினும் ஈண்டுஞ் சிறிது விளங்கச் சுருக்கமாக வெழுதப்படுகின்றது,

VII. இடையர்கள் கோவைசியரல்லர்; முல்லை நிலமாக்களே யெனல்.

திவாகரம் 131 வது சூத்திரம்

"முல்லையாளர் கோவலரிடையர்,
சொல்லிய அண்டர் பொதுவர் ஆன்வல்லோர்,
குடவர் பாலர் தொறுவர் கோவிந்தர்,
அண்டர் கோபாலர் ஆயர் அமுதர்,
ஒன்றிய முல்லை நிலத்தவர் பெயரே." இதற்குச் சரியாக ...ன்னது நிகண்டு மக்கட் பெயர்த்தொகுதி. 70வது கவி.

"முல்லையர் பொதுவரண்டர் முந்துகோ விந்தரேயான்
வல்லவர் குடவர்பாலர் மதித்தகோ வலர்கோபாலர்
சொல்லிய அமுதர்ஆயர் தொறுவரே இடையரென்ப
முல்லையின் மாக்கள்பேர்தா முன்னுன்குமொன்றுமாமே"
ஷடி இடப்பெயர்த்தொகுதி 48. வது கவி

தக்கசந் தாஞ்சதுக்கந் தருஞ்சிருங் காடகந்தான்
ஒக்குநாற் சந்தியாகு மோதிய சதுக்கமும்பேர்
திக்குறும் வாடைசேடி சிரேணியாம் ஆயர்வீதி
மிக்கவா பீனமாமா வேசனஞ் சிற்பர்வீதி. 48

இங்ஙனமாகத் திவாகர நிகண்டுகளில் இடையர்கள் முல்லை நிலமாக்களென்று சொல்லி யிருக்கவும் அறியாமை காரணமாக நிகண்டில் "வந்தகோ வலருடன்கோ வர்த்தனரிப்பர்மூப் பேர், முந்துகோ வைசிய ரென்று மொழிந்திடும்" என நூதனமாகக் கற்பித்த கற்பிதத்தை ஆதாரமாகக் கொண்டு நகராதியில்கோவைசியர் இடையர்களென வெழுதியிருப்பதை யறியாத சிலர் இவர்களைக் கோவைசியரென்று கூறுதல் அங்கீகரிக்கத்தக்கதன்றாம். அப்படிக் கற்பித்தது ஞாயமன்றென இப்புத்தகத்தி னோரிடத்தி லெழுதியிருக்கிறபடியால் இவ்விடத்தில் சுருக்கமாகச் சிறிது ஞாயமெழுதப்படுகின்றது,

அறிஞர்கள் முற்காலத்துள்ள பெரியோர்களியற்றிய புராணேதிகாச முதலியவற்றை நாளதுவரைக்கும் ஒப்புக்கொண்டு வந்திருப்பது சரதமல்லவா? அத்தகைய நூல்களில் இவர்கள் கோவைசியரென வழங்கப்பட்டிருக்கிறார்களா? இல்லையா? எனப் பார்க்கவேண்டும். வழங்கப்பட்டிருந்தால் அகராதியிலுள்ளது மங்கீகரிக்கத் தக்கதாம். அவ்வாறில்லாவிடத்து அணுவளவும் ஒப்புக்கொள்ளத் தக்கதன்றாம். ஆகையால் ஈண்டுப் பெரிய புராணம், பாரதம் முதலியவற்றிலிருந்து சிலவெடுத்துக் காட்டுவாம். இதனால் இடையர்கள் முல்லை நிலமாக்களென்பதும் கோவைசியரல்லரென்பதும் நன்குவிளங்கும். அன்றியும், கோவைசியர்களென்றதனாலே அவர்கள் வைசியர்கள் அல்லாமற்போனாலும் அவர்களினுட்பிரிவாயிரார்களா என்னும் சந்தேகமுந்தீர்ந்து இடையர்கள் வேறொரு சாதியாரென்பதும் தெரிந்துகொள்ளலாம்.

பெரியபுராணம் ஆனாய நாயனார் புராணம்.

ஒப்பில் பெருங்குடி நீடிய தன்மையி லோவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி யறம்புரி சால்போடுஞ்
செப்ப வுயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர்மேவும்
அப்பதி மன்னிய வாயர் குலத்தவ ரானாயர்.

ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார்
தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலிற்
பேயுட னாடு பிரானடி யல்லது பேணாதார்.

ஆனிரை கூட வகன்புற விற்கொடு சென்றேறிக்
கானுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்தெங்கும்
தூநறு மென்பு லருந்தி விரும்பிய தூநீருண்
ணேமி லாய முலப்பில பல்க வளித்துள்ளார்.

கன்றொடு பான்மறை நாகு கறப்பன பாலாவும்
புன்றலை மென்சினை யானொடு நீடு புனிற்றாவும்

வென்றி விடைக்குல மோடு மினங்கொ டாம் வெவ்வேறே
றன்றி நிறைந்துள சூழ லுடன்பல தோழங்கள்.

ஆவி னிரைக்குல மப்படிப் பல்க வளித்தென்றும்
கோவல ரேவல் புரிந்திட வாயர் குலம்பேணும்
காவலர் தம்பெரு மானடி யன்புறு கானத்தின்
மேவு துளைக்கரு விக்குழல் வாசனை மேல்கொண்டார்.

சேவடியிற் றொடுதோலுஞ் செங்கையினில் வெண்கோலும்
மேவுமிசை வேய்ங்குழலும் மிகவிளங்க வினைசெய்யுங்
காவல்புரி வல்லாயர் கன்றுடையா னிரைசூழப்
பூவலர்தார்க் கோவலனார் நிரைகாக்கப் புறம்போந்தார்.

என்னுமிச் செய்யுள்களால் ஆனாய நாயனார் ஆயர்குலத்தா ரென்பதும் அவர் மரபா ரேவல் புரியும்படி காலில் செருப்பும் கையில் கோலுமுடையராய்ப் பசுமேய்ப்பவ ரென்பதும் விளங்கின.

பாரதம், விராடபருவம், நாடுகரந்துறை சருக்கம்.

இளைபடு புரவி புரந்திடுந் தாமக் கிரந்திபாம் பெயர்புனை நகுலற், இளையவ னந்த கோபன்மைந் தனைப்போ லிடையர் தங்கோலமெய் தித், துளைபடு குழையி லொருகுழை யணிந்து தோளிலோர் தொடித்தடி தழுவி, விளைபுகழ் விராடன் வேந்தவை யதனை வேறொரு காளையி னடைந்தான்.

ஷை பருவம் நிரைமீட்சிச் சருக்கம்.

வளைய நாடெலா மன்னவன் வரூதினி பரப்பி
விளையு நன்பெரு விளைவெலாம் வெங்கனல் கொளுத்தி
யளையு மாமணி யானிரை கவர்தலு மாயர்
உளைய வோடிவந் தூர்புகுந் துத்தரர்க் குரைப்பார்.

கொண்ட கோனிரை கோவலர் கொண்டுமுன் போதத்
தண்ட விற்கெனத் தம்பிய ரனைவருந் தானுந்
திண்டி றற்பெரும் பேடியைத் தேர்நிசை கண்டு
மிண்டு வீரெனக் கூறிய சுயோதனன் மீண்டான்.

மூத்த வான்றெறு மீட்டலு மூற்கவர் பொதுவர்
வெந்த நெய்யென வாரவ மடங்கினர் மிகவும்
அந்த நெய்யினிற் பாற்றுளி யுகுதலெனை வார்த்தார்
வந்த மச்சர்கோன் மகனொடும் வந்தகோ பாலர்.

(௩௪. உத்தியோகபருவம், கிருட்டிணன் றூது சருக்கம்.

காவன் மன்னவர் முகங்கண் டோறுமிரு கண்பரப்பி யமர் கருதுவோ, ரேவ லின்கண்வரு தூதனு மிடைய னின்று நம் மவையி லெய்தினு, னேவ லின்றியெதிர் சென்று கண்டு கொழு துறவு கூறிலினி யுங்களுர், நீவ லஞ்செய வடர்ப்ப னென்றுநனி சீறினுன் முறைமை மாறினுன.

புன்பிறப்புடைய பொதுவ! தங்களொடு புறவி லாணி ரை புரந்திடு, முன்பி றப்புமுர லோடு கோலிய குழைப்பி னி தந்து மறந்துநீ, மன்பி றப்பினுயர் குருகு லத்தவர்தம் வாயி னை ந் தானுமொரு மாசிலா, வென்பி றப்புமுணை ராம லோசனையி லிரந்த வாசக மியம்பினுய்.

திருக்குறள்

அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.

ஒழிவி லொடுக்கம்.

மயலற்றூர் கேட்க மகிழ்ந்துரைத்த வார்த்தை
யயலுக் குபதேச மாகு—துயிலாத்
தொறுவனைப்போ னின்றுகேழ் தூசமூக்கு நோயு
மறுமுறைதகோ நாமுரைப்பதை.

என்றற் றொடக்கத்தனவாக நூல்கள் கூறுவதால் முல்லை நிலமாக்களாகிய இடையர்களுக்குப் பெயர்ஆயரெனறும் கோ வலரென்றும், இடையரென்றும், பொதுவரென்றும், கோ பாலரென்று மிருக்கின்றதேயன்றி ஒருபதமேனும் கோவைசி யரென்றில்லாமை யறிக. மேலும். இவர்கள் ஆனிரைமேய்ப்பா ரென்பதும், அத்தொழிற் குரியாரென்பதும் புலப்படக், காவில்

டொடுதோறும் கையில் கோலுமுடையா ரென்பதும் ஒருகா
தில் குழையணிவதும் பசுமேய்த்தற்காக ஒரு தோளில் தடிதா
ங்குவது முடையா ரென்பதும் பெறப்படுமா றறிக.

மேதாவியரான சேக்கிழார் சுவாமிகள் ஆனாய நாயனாரை
யும் வில்லிபுத்தூராழ்வார் சகாதேவரையும் விதந்து கூறும்
போது கூடச் சேவடியிற் றொடுதோறும் செங்கையினில்
வெண்கோலு முடையா ரெனப் பசுமேய்த்தற் சிறப்புச்சொன்
னார்களேயன்றிக் கோவைசியரென் றோரிடத்திலுங் கூறாமை
காண்க. சகாதேவன் நந்தகோபன் மைந்தனைப்போ லிடையர்
தம் கோலமெய்தி (அஃதாவது ஒருகாதில் குழையணிந்து
தோளில் கோல்தாங்கி) அரசவை யடைந்ததாகக் கூறினரே
யன்றிக் கோவைசியரென்ற பதம் அந்த விடத்திலாவது மற்
றெந்த விடத்திலாவது வழங்கி யிராமையுங் காண்க. இப்படி
முன்னோர்கள் ஒருகாலத்திலாவது ஓரிடத்திலாவது வழங்
காத அந்தப்பதத்தை இந்தக் காலத்தி லெப்படி உண்டென்
றொப்புக்கொள்ளத் தக்கதாம். ஆனாலிவர்கள் கோவாகியபசுவை
மேய்த்துக்காத்தல் பற்றிக் கோவைசியர்களென்று இப்போது
வழங்கக்கூடாதோவெனின், வைசியர்கட் கேற்பட்டபுறவுறுப்
பாய மூன்று தொழில்களிலொன்றான பசுவோம் புதலைக்குறி
த்துவழங்குவதாயின், தத்தமக்கேயுரித்தான தொழிலைக்கொண்
டவர்களுக்கேன் வைசிய ரென்னும் பதத்தை வழங்குதல்
கூடாது? யானை குதிரை கழுதை முதலியவிலங்கினங்களை
வசப்படுத்தி காத்தற் றொழிலையுடையவரை யங்ஙனம் வழங்
குவதின்மையா லிதுவுங்கூடாது. இது போன்றே பூவைசிய
ரென்றமைக்குஞ் சொல்ல வேண்டும். அங்ஙனமாயின், அவ்வி
ரண்டு பதமும் யாருக்கெனின், வைசியர்களுள் எவர் தனதானி
யம் பசுவென்பனவற்றி லதையெதையதிகமாக வாட்சி செ
ய்துவருகிறார்களோ அவர்களுக்கேயாம். எங்ஙனமெனின், ஒரு
குலத்தில் ஒருதாய் வயிற்றிற் பிறந்த சகோதரர் மூவர் இருப்ப
தாகவும் அவர்களிலொருவர் பொன் வியாபாரம் செய்பவரா
கவும், மற்றொருவர் ஆடை வியாபாரஞ் செய்பவராகவும், இன்

ஞொருவர் தானிய வியாபாரஞ் செய்பவராகவும் வைத்துக் கொண்டால், அவர்களிலொருவரைப் பொன்வியாபாரி யென்றும், மற்றொருவரைச் சவளிவியாபாரியென்றும், இன்னொருவரைத் தானியவியாபாரியென்றும் வழங்குவது உலகியல்பாம். அதுபோல வைசியர்களை அவ்வாறு வழங்கலாமேயன்றி மற்றவர்களை யவ்வாறு வழங்குவது பொருந்தாதெனக. அவ்வாறு முன்னோர்களும் சொல்லவில்லையென்க.

VIII. நிகண்டின் மாறுபாடு.

சூடாமணி நிகண்டிற்கு முதனூல் திவாகரமும் பிங்கலந்தையுமாமென்பது பிரசித்தமாம். ஷெ நூல்களின்வழி நூலாகியவிது முதனூல்களுக்கு விரோதமின்றி யிருப்ப தென்பது ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் பார்வையிட்டுப் பதிப்பித்த சூடாமணிநிகண்டால் நன்கு விளங்கும் யாரோ ஒருவர்சிலவற்றை நூதனமாகச் சேர்த்துப் பதிப்பித்த ஷெ புத்தகத்தைப் பார்த்து அதிலுள்ள பூவைசியர் கோவைசியரென்னும் பதங்களுக்கு இலக்கியார்த்தமானவர்கள் நாம்தாமென்று செருக்குற்றுச்சிலர் அகராதிகளிலும்அவ்வாறுபுகுத்தினர். அதையறியாத சிலர் அவற்றை மெய்யென நம்பி இப்போது புத்தகங்களும் பாடல்களும்செய்ய ஆரம்பிப்பதானார்கள். கற்றவிற்பன்னர்கள் அம்மதிமருட்சிக்கு ஏகப்பட்டவில்லையென்றாலும், போலியர்கள் பிரஸ்தாபனை யவ்வாறிருப்பதால் அந்நூதன மித்தன்மைத்தென விளக்குதல் அவசியமாயினமையின், இரத்தின நியாயம்போல் சுருக்கமாகச் சிலவெழுவதை நியாய சீலர்கூர்ந்து பார்த்து மகிழ்வாராக.

நிகண்டின் பாயிரம்.

அங்கது போய பின்றை யலகினூல் பிறந்த மற்றும்
செங்கதிர் வரத்திற் றோன்றுந் திவாகரர் சிறப்பின் மிக்க
பிங்கல ருரைநூற் பாவிற் பேணினர் செய்தார் சேர
இங்கிவை யிரண்டுங் கற்க வெளிதல வென்று சூழ்ந்து.

விரவிய தேவர் மக்கண் விலங்கொடு மரமிடம்பல், பொருள்செயும் வடிவு பண்பு போற்றிய செயலொலிப்பேர், ஒருசொற்பல் பொருள் ளேறுமுறைந்தபல்பெயர்க்கூட்டந்தான், வருமுறை திவாகரம் போல் வைத்துப்பிங் கலந்தை தன்னில்

என்னும் இச்செய்யுளால் நிகண்டானது திவாகரம் பிங்கலந்தைகளின் வழிநூலென்பது செவ்வனெவிளங்கும். திவாகரமாகிய முதனூலில் வைசியர்பெயர் (திவாகரம் மக்கட்பெயர்த் தொகுதி 32 வது சூத்திரம்)

இப்பர் பரதர் வைசியர் கவிப்பர்
எட்டிய ரிளங்கோக்க ளேர்த்தொழிலர் பசுக்காவலர்
ஒப்பி னாய்கர் வினைஞர் வணிகரென்
றத்தகு சிரேட்டிகள் செட்டிகள் பேரே. 32

என்றிருப்பதும்,

சூத்திரர் பெயர் (33வது சூத்திரம்).

வினைஞர் சூத்திரர் பின்னவர் சதுர்த்தர்
வணமையர் வேளாளர் மண்மகள் புதல்வர்
வாத்தியத் தொழிலோர் வண்களமருழுவர்
சீர்த்த வேரின் வாழ்நர்கா ரானர்என்றிருப்பதுமறிக .33

இங்ஙனமே வழிநூலாகிய நிகண்டில்

இங்கோக்கண் மன்னர் பின்னரிட்டரெட் டியரே நாய்கர்
வளம்பெறு வணிகர் நல்லாநீ காவலருழவர் மற்றும்
விளங்கிய பரதர் மேய வினைஞர்செட் டியர்பன் னொன்றும்
உளங்கொழு வைசியர் பேரா முறுசிரேட் டிகளு மாமே.

மண்மகள் புதல்வர் வாய்ந்த வளமையர் களம ரென்றும்,
உண்மைசால் சதுத்தர் மாறு வழவர்மேழியர்வே ளாளர், இன்மைகொ ளோரின் வாழ்நர் காராளர் வினைஞர் செம்மை, நண்ணுபின் னவர்பன் னொன்றும் நவினறசூத் திரர்தம் பேரே.

என்றிருப்பது மறிக. அதிலும் உளங்கெழு வைசியர் என்றும் நவின்ற சூத்திரர் தம்பெயர் என்றும் கூறியிருப்பதுமறிக. இவ்வாறிருத்தலை யூகித்துணராது பிறர்அதில் மனம்போனவாறெழுதி நூதனமாகச்சேர்த்த செய்யுட்கள் கீழ்வருவனவாம்.

இளங்கோக்கள் மன்னர் பின்ன ரிப்பரெட் டியர்கா ராளர், வளம்பெற வாழ்வே ளாளர் வைசியர்தம் பொதுப்பேராரும், இளந்தகோக் காத்தன்மற்றுங் கிளர்பொரு ளீட்டலேனை, விளங்கவே யுழலான் மூன்று குலம்பெறும் வேறு சொல்வாம்.

வந்தகோ வலரு டன்கோ வர்த்தன ரிப்பர் முப்பேர்
முந்துகோ வைசிய ரென்று மொழிந்திடும் வணிகர் நாய்கர்
தந்தனூற் பரதர் முப்பேர் தனவைசி யர்களே சாற்றும்
உந்துபூ வைசியர் முப்பே ருழவர்மே ழியர்வே ளாளர்.

இந்தமுக் குலத்து ளார்க்கே யேவல்பூண் டொழுகுகின்ற
வெந்திற லாளர் தாமே விதித்தசூத் திரரென் றாகும்
தந்தநூ லுரைத்த வாறே சாற்றின மிவர்க டாமே
புந்திய தொழிலுக் கெல்லா முரியவர் தெரியுங் காலே. 27

என்னுமிம் மூன்று செய்யுள்களையு மூய்த் துணர்ந்து நோக்கினலை, அவை நூதனச் செய்யுட்க ளென்பது தோன்றாமற் போகாது ஆனல் அவை நூதனமாக விருப்பினும்பொருள் சரியா யிருக்கும் பக்ஷத்தில்அங்கீகரிப்பதற் காட்சேப மின்றாம். இச்செய்யுள்களை யியற்றியவர் யாதுகருதி யியற்றினரென யூகிக்கவேண்டும். முதற்கவி வைசியர்தம் பொதுப்பேரா மென்று கூறியிருப்பதை யோசித்துப் பார்த்தால்,வைசியர்ஒரேவகுப்பாராயினும் அவர் தொழில்பற்றிப் பொதுச் சிறப்பெனவிருபாலரெனக்கூறவந்ததுபோலக் காண்பிக்கும். ஈற்றில்மூன்றுகுலம் பெறுமென்றதால், மேல்நினைத்த கருத்து மின்றென வெளியாகின்றதென்க அற்றன்று, கோக்காத்தல் பொருளீட்டல் ஏருழுதலென்று கிரமவிருத்தி யதற்கேற்பக், கோவலர் கோவர்த்தன ரிப்பரெனவும், வணிகர் நாய்கர் பரதர் எனவும், உழவர் மேழியர் வேளாளரெனவும் கூறியிருத்தல் கூடாவோ

வெனின், மூன்றுகுலம் பெறுமென்று முதற்கவியிலும் இந்தமுக் குலத்துளார்க்கு என்று மூன்றாவது கவியிலும் கூறியிருப்பதால், இடையர் செட்டிகள் வேளாளராகிய மூவரும் வைசியராக விருக்கலாமென் றாகித்து அகராதியில் கோவைசியர் இடையரென்றும் பூவைசியர் வேளாளரென்றும் குறிப்பித்தவாறும். அங்ஙனமாயின், ஏவல்விதித்துள்ள சூத்திரரென்றாரே, அச்சூத்திரருக்குப் பெயரேன் சொல்லவில்லை யெனின்; அஃதறியாமையேயாம். ஏனெனின், நிகண்டு விதிநூலென்றறிந்தும், இச்செய்யுளுக்கு முந்திய செய்யுளு மித்தொகுதியும் மக்கள் பெயரைத் தெரிவிப்பன வென்றும் அத்தொகுதி நான்கு வருணங்களின் பெயரைத் தனித்தனி கூறுவதென்றும பார்த்தும், "நாமும் ஒருவருணத்தா ராகிய வைசியர்களுக்குப் பெயர் சொல்வதுபோல் அபிநயித்து அதில் அன்னியர்களைப் புகுத்தவந்த இத்தீரர் சூத்திரரென்று சொல்லியவர்களுக்குப் பெயர்சொல்லாமல் விட்டது ஒருசாதியாரைச் சொன்னால் யாதாமோ எவரைச சொல்லவா மென்று கலக்கமுற்ற புத்தியாலேயாம். இவ்விடத்தி லிவ்வாறுகூறினவர் 12 வது தொகுதியில் நான்கு வருணங்களின் தொழில் கூறுமிடத்தில் வேளாளர் அறுதொழிலென்பதை மாற்றாது மறந்தது என்னையோ? நிற்க; இந்தமக்கட் பெயர்த்தொகுதி சாதிகளின் பெயரைச் சொல்ல வேற்பட்டதா; வெறு? சாதிகளின் பெயர் சொல்லத்தான் ஏற்பட்டதெனின், ஒருசாதியார் பெயர்சொல்ல வந்தது அவர்க்கு மூன்று தொழிலெனவிதந்து மூன்றுசாதியார் கூடியது ஒருசாதியென்று சொல்லுவது ஞாயமாமா? இவ்வாறு இதற்கு முதனூல்கள் சொல்லுகின்றனவா? இல்லையே, இல்லாதவற்றை யங்கீகரிப்பவர் விவேகிகளாவரா? இவ்வாறு யூகித்துப் பார்த்தால் அஃது அபத்தமென்பது நன்கு வெளியாம். ஆதலால் ப்ஷ மூன்றுசெய்யுள்களும் இடையேபாடிச் சேர்க்கப்பட்டனவேயாம். அவற்றை நிகண்டுநூல் செய்தவர் செய்திருக்கும் பட்சத்தில் வைசியர்கள் மூன்று சாதிசளென்று ஒவ்வொரு வைசியராகிய சாதிகட்கும் சொல்லிய பெயர்களைப் பெரியபுராணம் பாரதம் திருவிளையாடல் முதலிய நூல்கள் எடுத்தாண்

டிருத்தல்வேண்டும்? அன்றியுஞ்சூத்திரரைக் குறிக்கும்போது அவர்களைச் சூத்திர ரென்றுமாத்திரம் வழங்கியிருக்கவேண்டுமேயன்றிப் பின்னவர், உழவர், சதுர்த்தர் வேளாளரென்றற்றொடக்கத்தனவாக வழங்காமலுமிருக்கவேண்டும்? வேளாளர் சூத்திரரானபோதிலும் அவர்கள் மருதநிலமாக்களா யிருத்தலின் அவர்களைப் பூவைசியரென்றும், இடையர்கள் ஆயரானபோதிலும் அவர்கள் பசுக்காத்தலால் அவர்களைக் கோவைசியரென்றும் கூறலாமெனின், அதுகூடாது; அவ்வாறு கூறுதற்கு நூற்பிரமாண மின்மையினென்க. ஆகவே, அக்கவிகள் விசுவா மித்திர சிருஷ்டியேயாமென்க.

அகராதி.

638	வெள்ளாட்டி	ஏவற்பெண்.
,,	வெள்ளாண்மை	கிருஷி.
,,	வெள்ளாளர்	மருதநிலமாக்கள், பூவைசியர்.
645	வேளாட்டி	வெள்ளாட்டி.
,,	வேளாண்மை	ஈகை, உபகாரம், கொடை; மெய், பூவைசியம்.
,,	வேளாண்மை மாந்தரியல்பு	அழிந்தோரை நிறுத்தல், ஆணைவழி நிற்றல், ஒக்கல் போற்றல், ஒற்றுமை கோடல், ஓவா முயற்சி, கசிவகத் துண்மை, கைக்கட னாற்றல், திருந்திய வொழுக்கம், மனைநிறைதருதல், விருந்து புரந்தருதல்.
,,	வேளாண்மை மாந்தர்	வேளாளர்
,,	வேளாளர்	ஏரையாளர். பூவைசியர்.
,,	வேளான்	குயவன். வேளாளர்லோர்பகுதியான்.
,,	வேள்	ஆசை, ஆண்மகன், உபகாரம், குமரன், மண், மன்மதன்,
946	வைசியர்	மூன்றாவது சாதியார்; அவர் தனவைசியர் அல்லது வணிகர், பூவைசியர் அல்லது உழவர், கோவைசியர் அல்லது இடையரென மூன்று வகுப்பினர்.

946	வைசியக் கிரியை வைசியர் தொழில்	வேளாண்மை, வியாபாரம். பொருளீட்டல், பயிர்செய்தல், ஆன்காத்த லென்று மூன்று தொழில்.
104	இடைச்சி	முல்லைநிலப்பெண்
,,	இடைச்சேரி	இடையரூர்
105	இடையர்	முல்லைநிலமாக்கள்
362	கோவர்	இடையர்
,,	கோவர்த்தனர்	இடையர்
,,	கோவலர்	இடையர்
363	கோவைசியர்	மூவைசியரி லொருவர்; அவர் இடையர்
505	தருமசிவாசரி	வைசியகுரு
428	கிலேட்டர், சிலேபியர்	செட்டிகள்
261	களமர்	உழுநர், சூத்திரர், மருதநில மாக்கள்.
170	உழவர்	பூவைசியர்.
,,	உழவர்	சூத்திரர், வேளாளர், மருதநில மாக்கள், படைவீரர், பூவை சியர்.
379	சதுர்த்தர்	சூத்திரர், சமர்த்தர்.
280	காராளர்	சூத்திரர், பூவைசியர்
854	மேழியர்	வேளாளர், மருத நிலமாக்கள், பூவைசியர்.
330	கோமட்டி	கோமுட்டி.
,,	கோமுட்டி	ஓர்சாதி.
398	சலவர்	நெய்தநில மாக்கள்.
415	சாலிகர், சாலியர்	நெய்வோர்.
473	சேடர்	நெய்வாரினோர் பகுதி, அடி மைக்காரர்.
573	தேவாங்கம், பட்டுச்சீலை	மெல்லெசெய்வோர்.
257	கவரை	ஓர்சாதி வடுகர்.
,,	கவரைச்செட்டி	செட்டிகளில் தாழ்ந்த சாதி.
474	சேணியர்	நெய்வாரி லோர்பகுதி.
403	செக்காட்டி	எண்ணெய் வாணியன்.
,,	செக்கான்	செக்காட்டி.
892	வாணியர்	எண்ணெய் விற்போர், ஓர் சாதி செட்டிகள், வியாபாரிகள்.

இவ்வாறு பேரகராதியி லுள்ள பதங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் நன்றாய்க் கவனித்துப் பார்த்தால் முன்னரே யிருப்பனவிவை, இடையே சேர்த்தவை யிவையென வெளியாகாமற்போகா. ஈண்டுப் பூவைசியர் கோவைசியரென்று சந்தர்ப்பமின்றிவந்து பதங்கள் கலந் திருப்பதை யூகித்துப்பார்க்கவேண்டும்.

இலிப் பொருளகராதியில் (31 வதுபக்கம்)

1 அயனூருவில் வந்தோர் இப்பர், எட்டியர், செட்டியர், சிலேபியர், தனவைசியர், தாணிகர், தேசிகர், தோன்றினர், நாய்கர், பரதர், வணிகர், வாணிபர் என்பவை செட்டிகட்கென்றும்,

(68 வதுபக்கம்)

2 அயனூருவில் வந்தோர், இப்பர், இளங்கோக்கள், எட்டியர், சிலேபியர், செட்டியர், தருமக்கிழவர், தாளாளர், தாணிகர், தேசிகர், தோன்றிகர், நாய்கர், பரதர், மன்னர், பின்னர், முத்தொழிலோர், வணிகர், வாணிகர், என்பவை வைசியர்க்கென்றும்,

மருதநிலமாக்கள் (31 வது பக்கம்)

3 அயன்பதத் துதித்தோர், இசையுந் தொழிலர், உழவர், களமர், காராளர், சதுர்த்தர், பின்னவர், மண்மக்கள், விளைஞர், வெண்களமர் என்றும்,

(54 வதுபக்கம்)

4 உழவர், கடைஞர், கம்பளர், களமர், கிளைஞர், தொழுவர், மள்ளர், விளைஞர் என்றும் இருத்தலும்,

(58 வது பக்கம்)

5 அண்டர், அமுதர், ஆயர், ஆன்வல்லோர், இடையர், இப்பர், கானவர், குடவர், கோபாலர், கோவர், கோவர்த்தனர், கோவலர், கோவிந்தர், தொறுவர், பொதுவர், முல்லையர், கோவைசியரென்பவை. இடையர்களுக்கென் றிருப்பதும்,

தொகையகராதியில் (30வது பக்கம்)

6 வைசியர் 3-தனவைசியர், பூவைசியர், கோவைசியர்; இவர்க்கு முறையே தொழில் பொருளீட்டல் பயிர்செய்தல் ஆன்காத்தல். இவர் வருணத்தாலொன்றாயினும் தொழிலான் வேறாயினார்.

என்றிங்ஙனமாகப் பெயர், பொருள், தொகை யென்னும் மூவகை யகராதிகளுள் சிலவிடத்துச சரியாகவும் சிலவிடத்து மாறாகவுமிருத்தலுந் தெரிந்துகொள்ளல் வேண்டும். எங்ஙனமெனின், பொருளகராதி 31, 63, வது பக்கங்களில் செட்டிகளுக்கென்றும் வைசியர்களுக்கென்றும் குறிப்பிட்ட பதங்கள் அநேகமாகச் சரியாகவே யிருக்கின்றன. அப்பக்கத்தில் சூத்திரருக்குச் சொன்னதும சரியாகவே யிருக்கிறது. 58 வது பக்கத்தில் இடையர்களுக்குக் கூறியதில் கோவைசியரென்று புகுத்தினமை சரியன்றாம். அன்றியும் இந்தப் பொருளகராதியில் பார்ப்பாருக்கும், அரசர்களுக்கும், செட்டிகளுக்கும், சூத்திரருக்குமாக நான்கு வருணத்தார்கள் பெயர்களெழுதி யிருப்பதில வைசியர்களென்னுமிடத்தில் தனவைசியர் பூவைசியர் கோவைசியரென்றில்லாது முற்றும் வணிகர்களுக்குச் சொல்லித தொகையகராதியில் வருணத்தாலொன்றாயினும தொழிலால் வேறு என்று விதந்து கூறியது பொருத்தமுடைய தன்றாம். இப்படி பேரகராதியிலும் சிலவிடத்திற் சரியாகவும் சிலவிடத்தில் மாறாகவு மிருப்பதறிக. இதனால், முன் பெழுதிய நிகண்டும் அதன சம்பந்தமாய அகராதியும் சிறிதுபேதப் பட்டிருத்தல் விளக்கமாம. ஆனால் நூதனமென்று யாம்சொல்லுகிற பூவைசியர் கோவைசியரென்னும் பிரயோகம் பூர்வமேயுள்ளது தானெனறால் பூர்வத்துள்ள மேதாவிகள் அவ்வாறு வழங்கி யிருப்பார்களாயின் அது பொருந்தும். அங்ஙனமின்மையின், நூதனமென்பது சரியேயாம். இதனால் வேளாளரும் இடையரும் முறையே பூவைசியருமல்லர் கோவைசியருமல்லர் என்பது பெறப்படும். படவே, வேளாளர் சூத்திரரே; அவர்களே மருதநிலமாக்கள். இடையர்களே முல்லைநிலமாக்கள் என்பன சித்தாந்தமானவாறறிக.

IX. வைசிய நிரூபணம்.

இதுகாறுமெழுதிய ஸ்வல்ப நியாயங்களாலேயே வேளாளர் சதுர்த்தர்களென்றும், கோவைசியரென்பது இடையர்களுக்கு முன் வழங்காத பெயரென்றும், அவர்கள் முல்லைநிலமாக்களென்றும், பூவைசியர் கோவைசியரென்று நிகண்டில் இருப்பது நூதனமென்றும், அது சரியல்லவென்றும் விளக்கினோம். இதனால், வைசியர் மூன்றுமரபினர்களென்பதும் அவர்கள் செட்டிகளென்பதும் தெரிந்துகொள்ளவேண்டும். அங்ஙனமாயின், இன்னும் சிலர் நாங்கள் வைசியர்களென்றும் நாங்கள் செட்டிகளென்றும் சொல்லுகிறபடியால், வைசியர்கள் இன்னார் தாமென்று தெரிந்துகொள்வது சாத்தியமாகாதிருக்கின்றதெனின், வைசியர்களல்லாதவர்களும் தங்களை வைசியர்களென்று கூறுவதால் அவ்வாறுண்டாகும் சந்தேகத்தையும் நிவிர்த்திக்கவேண்டுவதவசியமாம். ஆகையால் சுருக்கமாகச் சிலவெழுதுவாம். சிலர் இப்போது வைசியர்களே யில்லையென்பதாலும் ஏனைய சாதியாரையுஞ் சிலர் செட்டிகளென்று வழங்குவதாலும் கற்றோருக்கன்றி மற்றோர்க்குச் சந்தேகமுண்டாவது கூடுமாகையாலதுபற்றிச் சுருக்கமாக ஈண்டெழுதுவதுசிதமாயிற்று. கவரையர் சலுவர் சாலியர் சேடர் சேணியர் குயவருள் ஓர்பிரிவினர் முதலானவர்கள் தம்மைச் செட்டிகளென்றும் கோமுட்டிகள் வாணியர்கள் நாட்டுக்கோட்டையார் வேளாளரில் ஓர் பிரிவாராகிய வெள்ளாஞ்செட்டிகளென்று வழங்கப்படும் வேளாளர்களாகியவிவர்கள் தம்மைச் செட்டிகளென்றும் பட்டப் பெயருடன் சொல்லுகிறார்கள். இவர்களுள், முற்கூறியவர்கள் தம்மை வைசியர்களென்று சொல்லாமற்போனாலும் செட்டிகளென்ற விசேஷப்பெயரைச் செட்டுச் செய்வது காரணமாக வைத்துக்கொண்டார்களென்றும் காருகத்தொழிலுடையவர்களும் அப்பெயர் வகித்துக்கொண்டதை யோசிக்கில் செட்டு என்கிற விசேஷம் பற்றியே யிருக்கலாமென்றும் சிலர் நினைக்கிறார்கள். சிலர் அங்ஙனமன்று; இப்

போது சில ஜாதியார் முப்பது வருடங்களுக்குமுன் தங்கள் குலத்திற்கிருந்த சாதிப்பட்டப்பெயரை மாற்றி வேறாக வழக்கத்துக்குக் கொண்டுவந்து நீதியுமதுபோல் முன் குறுநிலமன்னர் அரசுகைக் காலத்தில் அங்ஙனம் செய்துகொண்டார்களென்று சொல்லுகிறார்கள். அங்ஙனமாகிலும், அது விசேஷத்தாலேயாம்; உண்மையிலங்ஙனமன்றாம். நிற்க; பிற்கூறியவர் முற்கூறியவர்களுக்கு நிகண்டு அகராதிகளில் பெயரிருப்பதறிவது போல் இவர்கள் ஒவ்வொர் சாதியாராக விருப்பதுமறியலாம். அப்படியிருக்க, அவர்களை வைசியர்களென்று சொல்வது யாங்ஙனம்? இவர்களில் கோமுட்டிகள்

1. கோமுட்டிகள்.

தமிழ்நாட்டிற் குறித்தானசாதிய ரன்றாம். நிகண்டில் அவர்களைப்பற்றி யொன்றும் கூறவில்லை, அகராதியிலும் அவர்கள் வைசியர்களாகச் சொல்லப்படவில்லை; முக்காதியென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்களைத் தெலுங்கு நிகண்டு வைசியர்களென்று கூறுகின்றதென்பர், அவர்கள் நூற்றெட்டு கோத்திரமுடையவர்களென்றும் பிறர் சொல்லுகிறார்கள். ஆனால் சம்ஸ்கிருத நிகண்டில் வைசியரென்று சொல்லாதவிவர்களைத் தெலுங்கு நிகண்டு வைசியர்களென்று சொல்லுகிறதென்பது இப்போது தமிழ்ச்செண்டகராதிகளில் பூவைசியர் கோவைசியர் என்றமைபோல் கற்பிதமாகவிருக்க வேண்டுமேயன்றி வாஸ்தவமாயிராது. அது புராதனமாயிருக்குமாயின், முற்காலத்தில் இராயர் சம்ஸ்தானத்தி லிவர்களுக்கும் வைசியர்களுக்கும் வைசியர்களென்னும் விஷயத்தில் விவாதமுண்டானபோது கோமுட்டிகள் வைசியர்க ளல்லரெனத் தீர்மானமாகித் தோல்வியடைய, தோல்வியடைந்த இவர்கள் செலுத்தவேண்டிய அபராதத்தைக்கொடுக்கமுடியாது வேண்டிக்கொண்டு வைசியர்களுக்குவீரமுட்டிமூலமாகத் திருப்திசெய்யவுடன்பட்டார்கள். அங்ஙனமின்றாயின் காளதுவரையிலும் செட்டி வீரமுட்டிகள் வைசியர்களிடம் பரிவர்த்தனை பெற்று வருகின்றமை யேற்பட்டிருக்காது, அன்றியும், அகராதியில் தருமசிவாசாரி வைசியகுரு

வென் றெழுதப்பட்டிருக்கின்றமையாலும் இவர்கள் அவனை யாசிரியராகச் சொன்னமையாலும், கோமுட்டியென்று வழங்குவதாலுமிவர்கள் வைசியர்களல்லவென்பது வெளிப்படையாம்.

2. வாணியர்

வாணியர்களை நிகண்டுகாரர்களில் செக்காரென்றெழுதியிருப்பதாலும், காந்தம் ஆதசங்கிரக சிவமான்மிய கண்டம் 12-வது சுலோகக் கருத்து மனுவாதலாலும், நாயன்மார் புராணங்களிலவர்களைத் தைலவினையாளர் என்றமையாலும், சாசனங்களில் இவர்களைச் சூத்திரருக்குங் கீழாகச் சொல்லியிருப்பதாலும், இவர்கள் மன்றுடையாரிடமே கோத்திரத்தாயிரத்தொருவரென்று வழங்கிக்கொள்வதாலும், கம்பர் வேளாளரைச் சிறப்பித்துப்பாடிய

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே-முட்டிபுகும்
பார்ப்பா ரகத்தையெட்டிப் பாரோமே யெஞ்ஞான்று
காப்பாரே வேளாளர் காண்.

இக்கவியில் செட்டிகளென்றும் செக்காரென்றும் வேறு பிரித்திருக்கிறமையாலும் இவர்கள் வைசியர்களல்லவென்பது பசுமரத்தாணியாம்.

3. நாட்டுக்கோட்டையார்.

இவர்கள் 1894-ம் ௵த்தில் ரிஜிஸ்தர் செய்து வெளியிட்டிருக்கிற சரித்திரப் புத்தகத்தில் ஆதியில் சந்திரகுல வைசியர்களாயிருந்தவர்கள் பின்னொருகாலத்தில் மானபங்கத்தற் காரணமாய் ஆண்மக்களை நிறுத்திப் பெண்மக்களுடன் ஸ்ரீ புருடர்களனைவரும் பிராணவியோகம் செய்துகொண்டதன்மேல், எஞ்சிய சிறுவர்கள் அரசன் வேண்டுகோட்கிசைந்து வேளாளப்பெண்களை மணஞ்செய்துகொண்டு காவிரிப்பூம் பட்டணத்தில் ஒரு தெருவில் பூர்வவைசியர்களிருக்க மற்ற மூன்று தெருவிலும் இருந்துபிரவிருத்தி யாயினமையால் சந்திரகுல

காருலவைசியர்களென்றும், அல்லது உபயகுலவைசியர்க ளென்றும், அதற்குச் சாட்சியாக இப்பொழுதும் ஸ்ரீகளுக்கு வெள்ளான குருவும், ஆடவர்களுக்குப் பிராமண குருவும் இருக்கிறார்களென்று மெழுதியிருக்கிறபடியால் இவர்கள் சாஸ்திர விதிப்படி உத்தமவைசியர்களன்றாம். ஏனெனின், சந்திரகுல வைசிய ரென்றமையாலும், இவர்கள் தமது சரித்திர புத்தகப்படி அனுலோபதன்மையையடைந் தமையாலும், வைசியகுரு தர்மசிவாசாரிய ரென்றிருப்ப, இவர் கள்குருவேறு களிருக்கின்றமையாலும், இவர்கட்கு முக்கியமாக வைசியாசாரப்படி சிகையக்ஞோபவீத மின்மையாலு மிவர்கள் உத்தம வைசியர்க ளாகார்க ளென்க.

4. வெள்ளாஞ்செட்டிகள்.

இவர்கள் தம்பெயராலேயே வைசியர்கள் அல்லவென் பதை விவேகிகள் ஒருவர் சொல்லாமலே தெரிந்துகொள்வார் கள். வெள்ளாஞ்செட்டிகளென்பது தேவாங்கச் செட்டிகள், சேணியச்செட்டிகள், தெலுங்குச் செட்டிகள் (அஃதாவது சனுப் பச்செட்டிகள்), கவரைச் செட்டி களென்பன போலவாம். அவர் கள் தங்கள் சாதிப்பெயரை முன்னும் செட்டியென்னும்பெய ரைப் பின்னுமாக வைத்து வழங்குவதுபோல வேளாளரும் வெள்ளாளனென்னும் சாதிப்பெயரை முன்னும் செட்டியென் னும் பெயரைப் பின்னுமாகவைத்து வெள்ளாளன் செட்டி யென்று வழங்கிவருகிறார்கள். இதனால் வெள்ளாளர் முதலி யோர் வைசியர்களல்லவென்பது நன்கு பெறப்பட்டது. இவர் கள் வைசியர்களல்லராயின் செட்டிக ளென்ற பெயரை வகித் துத் தம்மைச் செட்டிகளென்று கூறிவருவது என்னையெ னின், கூறுகின்றாம்:—

செட்டு (வர்த்தகம்) செய்பவர் செட்டிகளென்று சாதா ரணமாகச் சொல்லப்படுகின்றது. அக்காரணத்தா லவர்கள் செட்டிகளென்று சொல்லப்படுகின்றனர். வர்த்தகம் செய்யாது காருகமுதலிய தொழிலுடையரா யிருக்குங் காலத்திலும்

அவர்கள் அப்பெயரா லழைக்கப்படுதல் அவர்களின் முன்னோர்கள் வர்த்தகஞ்செய்து அதனாலடைந்த அப்பெயராலேயாம்.

அங்ஙனமாயின், பயிர்செய்தலைக்கொண்டு வேளாளராக விருக்கு மிவர்களுக்குரிய பிள்ளை முதலியென்னும் பெயர்களை இந்தச் செட்டிகள் அல்லது மற்றவர்கள் சொல்லுகிறபடி செட்டுக்காரணமாகப் பெயர் வகித்தவர்கள் வகித்துக்கொண்டு வழங்குகிறார்களாயெனின், உண்டு. யாவர் வைத்து வழங்குகிறார்களெனின், இந்தவேளாளராகிய சூத்திரர்களுக்குத் தாழ்ந்த சாதியாரிலுஞ் சிலர் அறியாமையால்வைத்துவழங்குகிறார்களேயொழியப் பிராமணர் அரசர் வைசியராகிய விந்தமேன் மூவருணத்தாரும் தங்கட்குரிய தொழில் சிறிதுமில்லாமல் முற்றுமே பயிர்செய்தலை வைத்துக்கொண்டபோதிலும் தங்கள் சாதிப்பெயரை முன்னும் பிள்ளை முதலி யென்னும் பட்டப்பெயரைப் பின்னுமாகச் சேர்த்தாவது அல்லது தனித்துப் பிள்ளை முதலியென்றாவது வகித்து வழங்குவ தில்லை யென்பது மிகுபஷ்டமாம் ஆனால் செட்டியென்னும் பட்டப்பெயரை அந்தணரரசர்கள் வைத்துக் கொள்ளுகிறார்களாவெனின், இந்தமூன்றாவது மரபார்க்குரிய செட்டியென்பது இவர்களுக்குக் கீழிட்ட சதுர்த்தாமுதலான தாழ்ந்தவர்களுக்கு விசேஷமே யொழிய முதலாவ திரண்டாவதுவருணத்தார்க்கு விசேஷமன்றாம் எங்ஙனமெனின், பிராமணர்களில் அநேகர் வெகுகாலமாக வர்த்தகம செய்து வந்தும் செட்டிகளென்னும் பெயரை வகித்துக்கொள்ளவில்லை. இதுபோலவே அரசர்களும் வர்த்தகம் செய்தாலும் பயிர்செய்தாலும் தங்கள் சாதிக்குரிய பட்டப்பெயரைத் தவிர்த்துக் கீழானவர்களின் சாதிக்குரிய பெயரைவகிக்க விரும்புவதில்லை ஒவ்வொருவரும் சாதாரணமாக உயர்வை விரும்புவதே வழக்கமாம். அதுதாழ்ந்த ஜாதியாருள் சிலர் உயர்ந்த சாதிககுரிய பட்டப் பெயர்களை வகித்து வழங்குவதால் நன்குவெளியாம். மூன்றாவதாராகிய செட்டிகள் தங்களுக்குரித்தாகிய பயிர், வர்த்தகம், முதலிய

தொழி லுடையவர்களா யிருந்தாலுஞ்சரி, அல்லது வேறுத்தியோக முதலிய வெவ்விதவுயற்சி யுடையவர்களா யிருந்தாலுஞ்சரி, அவர்கள் தங்கள் மரபிற்குரிய செட்டிகளென்பதைவிட்டு வேறு பெயர்களை யேற்றிட்டு வைத்து வழங்காமை யிங்கறியத்தக்கதாம். மேலெழுதிய நியாயங்களை யுய்த்துணர்ந்தால் வெள்ளாளர்களுள் வர்த்தகம் செய்தலைப்பெற்றோர் வெள்ளாஞ்செட்டிகளென்று சொல்லப்பட்டார்களே யல்லது உண்மையிலவர்கள் வைசியர்களல்லவென்பது குன்றிலிட்ட விளக்காம். அன்றியும், இவர்களுள் போஜனம், பூர்வாபர கிரியைகள், குருஸ்தானங்கள் ஏனைய காரியங்களாகிய விவற்றிலும் சிறிதும் வேற்றுமை கிடையாது. ஆகையா லிவர்கள் வேளாளராவதல்லது வைசியராவதெங்ஙனமாம். இங்ஙனமேசெட்டிகளென்று சொல்லும் ஒவ்வொரு சாதியாரும் சூத்திரர்களாகலாவது அவர்களிலும் தாழ்ந்தவர்க ளாகவாவது இருப்பவர்களேயன்றி மூன்றுமரபுக்குரிய வைசியர்களுக்குமேலான இரண்டாவதார் அல்லது முதலாவதாராக விருக்கமாட்டார்களென்க. ஆனாலிப்போது சிலர் 1870 ம் ஹு குடிமதிப்புச் சபை யேற்பட்டு ஜனகணிதமானது முதற்கொண்டு பிரதம உத்தமவருணமாகிய நான்குசாதிகளின் பட்டப்பெயர்களுள் தங்கள்தங்கள் சாதிவருக்கத்திற் கிஷ்டப்படி நூதனமாகத் தங்கள் பெயருடன் சேர்த்துரிக்கார்டாக வழங்கிவருகிறார்கள். அதுபற்றி ஒருவருங் கவனியாமையால், அவர்களிஷ்டம் நிறைவேறுகின்றது. இராசாங்கத்தார் சாதிசமயங்களிற் பிரவேசிக்கக்கடமை யில்லாதவ ராகையால், இவ்வளவு சுயேச்சையாகயாரும் தங்கள் மனம்போலச் செய்யவேதுவாயிற்று. ஆயினும் நன்மேலோர்க ளேற்றாக்கும் அவர்கள்செய்ததால்களுமாறுமா? ஆகவே, யாரெப்படி கூறினும் உள்ளபடி யாகுமேயன்றி வேறாகாது. ஆகவேயிதுகாறு மெழுதிய நியாயங்களால் ஒருகாலும் தொழில் காரண மாகவோ, அல்லது பெயரின் விசேஷகாரணமாகவோ, அல்லது பிறகாரணமாகவோ செட்டிக ளென்றாலும் வேளாளர்முதலியோர் வைசியர்க

ளாசார்க ளென்பது கரதலாமலகமாக விளங்கும் ஆகையால், பரமசிவங் களிகூர உபதேசம்செய்த குமாரக்கடவுளே மூன்று வது மரபிற் குரியர்களில் தாமுமொருவ ரெனத்தோன்றியும், அக்குலத்தாற் குரிய சாதிப்பெயர்களில் சிரேஷ்டமான செட்டி யென்பதைத் தமக்கொரு பெயராகச் செட்டிக் குமா ரெனக் கொண்டுமுள்ளகௌரவவிசேஷ சம்பத்துள்ளகுபேர வம்சவைசியர்கள் மான்மியம் அளவிட்டுச் சொல்லத் தக்க தன்றாம். இங்ஙனமான வைசியர்களுக்குச் சரியாக நாங்களும் வைசியர்க ளென்று வைசியரிற்றாழ்ந்த சாதியார்களிற் சிலசாதி யார் சொல்லிக் கொள்வது குற்றமற்ற நவமணியிற் சிறந்த மா ணிக்கத்திற்கு உருக்கின சிவப்பு உயர்ந்ததென்று கூறுவது போலாம். மேலும், உயர்ந்தமாற்றுள்ள சுவர்ணாபரணத்துக்குக் கிலிட்டாபரணம் உயர்ந்ததென்று கூறுவது போலுமாம்.

இன்னும் மூன்று மாபினராகிய இவ்வுத்தம வைசி யர்கள் சிறப்பு எப்போலியரால் சொல்லற்பால தன்று. அத னைப் புராணேதிகாசங்களி லறிக. ஆயினும்இப்புத்தகம் வைசிய குலவிளக்க மென்றும், அதினுமிது சுருங்கச்சொல்வ தென்று மிருப்பது கொண்டு வைசியர்களின் பெருமை தெரியவும் வேண்டும்; சுருக்கமாகவு மிருத்தல்வேண்டு மென்பதுபற்றி வைசியபுராண முதலியவற்றிலிருந் தெழுதாமல் உலகமெல் லாந்துதிக்கப் பெற்ற ஔவை யென்னும் கலைமகள் பூர்வம் புகார் பட்டணவாசியாகிய பத்தனென்னும் வைசியன்மீது பத்த னந்தாதி யென்னும் பாடிய பிரபந்தத்தில் சில கவிகளெழுதுவதால் வைசியர்களின் பூர்வநூல்களிற் கூறுகிறபடி செல்வத்திறனும், திவாகர நிகண்டிலுள்ளபடி இளங் கோக் கள் மன்னர் பின்னரென்றதற்கேற்பத் தசாங்கசம்பன்னராய்ச், சர்வஜசுவரியராய் அருமையான கொடைவள்ளலராய்த், தெய் வானுக்கிரக முடையராய் வாழப் பெற்றமை விளங்கும். மேலும், ஷை வைசியர்கள் இப்பொழுதும் பலசாதிப் பகுப்பா யுள்ள பிரஜா கூட்டத்தில் பூரணச்சந்திரன்போல் பிரகாசித்

துக்கொண் டிருக்கிறார்களென்பது குன்றின்மேலிட்ட தீபமாம். மூன்றாவது மரபாராகிய உத்தமவைசியர்களுக் குரிய தசாங்கம் வருமாறு:—

1.	இரதம்	கமலகண்டிகை	தேர்
2.	கஜம்	ஜயவாரணம்	யானை
3.	துரகம்	கலிமாருதப் புரவி	குதிரை
4.	துவசம்	கருடக்கொடி	கொடி
5.	முரசம்	பைந்நாகமுரசு	முரசு
6.	மாலை	காந்தள்புஷ்பமாலை சீரக புஷ்பமாலை	மாலை
7.	மலை	கிட்கிந்தமலை	மலை
8.	நதி	பம்பாநதி	நதி
9.	நாடு	வைகுந்த வளநாடு	நாடு
10.	நகரம்	புகார்ப் பட்டணம் அயோத்தி பட்டணம் தருமாபுரி பட்டணம்	நகரம்

இத்தசாங்கம் வந்தகாரணத்தை வைசியபுராணம், சிலப்பதிகாரம் விளையாபதி முதலிய நூல்களிலறிக.

கோத்திரம் ஆயிரம். இதனை வடாரண்ய மான்மிய மென்று வசனரூபமாயுள்ள புத்தகத்திற் காணலாம். வைசியர்களுக்குரிய வேதம் சாமவேதம். இதனைச்சுருதி ஸ்மிருதிகளிலறிக.

வைசியர்கள் பிரபாவம் ஔவையாரருளிச்செய்த அந்தாதி, அம்மானை, கம்பர்புகழ்ந்த கைவளம் முதலியவற்றால் நன்கு விளங்கும்.

பந்தனந்தாதி.

எடுத்த மனைக்கடொறு மேகவிழி செல்வங்
கடுத்தவுரை வாராமற் காத்தோன் - றொடுத்த
வலிமா ருதப்புரவி மாநாகன் பந்தன்
கலிமா ருதப்புரவிக் கால். 1

போர்த்தபடா மாநாக ணகபதி புக்கதற்பின்
வாய்த்தபெருங் கீர்த்திபெற்ற வாழ்வணிக்-னேத்தரிய
நற்கவிசொ லவ்வைக் கருள்புரிந்த நாகந்தை
மற்பொலிதோட் பந்தன் வலி. 2

கட்டெங் கருடக் கொடிகமல கண்டிகைத்தேர்
மட்டமர்தார் தோன்றிமலை கிட்கிந்தை - நட்ட
குடிகெழுசீர்ப் பூம்புகார்க் கோவணிகன் பந்தன்
வடிகெழுசீர் வேலோன்றன் மாறு. 3

சீதமதி வெண்கவிகைத் தேர்வேந்தர் பின்னென்றும்
போதிவணி கேசன் புகார்ப்பந்தன் - சாதிபோ
லெண்ணுஞ் சமய முளதோ வெதிராக
மண்ணில் வருஞ்சமய மற்று. 4

புவிமன்ன ரெண்ணிவரும் போதிவணி கேசன்
செவிமன்னுஞ் செஞ்சொற் சிறந்தோன் - கவிமன்னர்
கண்ணுங் கொடைப்பந்த ணகந்தை தன்னுடனே
யெண்ணுங் குடிபதினாறே. 5

இப்பா ரிடத்தி லியல்வணிகன் பந்தனைப்போ
லொப்பாரோ சொல்லீ ருலகுதனின்-மெய்ப்புலவீர்
நெல்லிக் கனியளித்த நீள்கவிகைக் கோமானென்
சொல்லுக் கவனே துரை. 6

கண்டுகொண்டேன் பந்தன் கருணைத் திருமுகமுங்
கண்டுகொண்டேன் செய்யகலி மாருதமும் - கண்டுகொண்
றேர்கமல கண்டிகையுந் தெய்வச் செயக்களிறும் [டேன்
வார்கமல மென்முலையாய் வந்து. 7

பதிக்குமே லானபதி பட்டினமே கங்கை
நதிக்குமேற் பம்பை நதியா - மதிக்கும்
வடித்தவே ணகந்தை மரநாகன் பந்தன்
குடிக்குநேர் போதாக் குடி. 8

போதலர்கா வேரிக்கும் பூம்புகார்க் கும்புதிய
நாத னெனப்பிறந்த நாகந்தை - தாதார்
வரிவண்டோர் பூங்குழலாய் மாப்பந்தனைப்போற்
பரிவுண்டோ பாவலர்தம் மேல். 9

மேலாந் திறல்வீரர் வேந்தர்க்கு மெய்புவிக்கு
காவலாங் குடிக்கு கலியென்பார் - சேலாரு
மைந்தன் கடற்புகார் மாநாக ளுகக்கைப்
பந்தன் புகழோதும் பார். 10

வழங்கு முகில்போன் மருவலர்க ளஞ்ச
முழங்குமுகின் மூரிப்பை நாகர் - தழங்குமுர்த்
தென்னற்குஞ் சோழற்குஞ் செம்பியற்கும் பின்
முன்னிற்கும் பந்தன் முரசு. [னென்று 11

பரிந்துவரு கோகிலமே பாதாள ராயன்
விரிந்த பணுமணியை வென்றோன் - தெரிந்தயற்
றேமாம் பொழிற்புகார்ச சிர்க்கமல வைகுந்தக்
கோமான் வரவின்று கூறு. 12

தொழில்க ளொருமூன்றுஞ் சொன்னபடி தானே
யெழில்பெறவே செயதுயர்ந்த வெங்கோன் - பழுதிலா
நண்ணுங் குடிசிறந்த நாகநதைப் பந்தனெனு
மென்னும் புகழா னியல். 13

சிறப்பென்றும பைங்கிளிகா டேன்புகார்ப் பநதன்
பிறப்பெனறு பேரளகை யென்று - மறப்பில்சா
நநதிநா டென்று நகர மயோதி யெனறு
மூர்துநதி யம்மையென்று மோது. 14

தெளிவுடைய பூம்புகார்ச செல்வமா புன்ளோர்க்
கொளியுடைய பேராயி ரத்தோன் - றெளிவுடைய
பந்தனெனப் பாவம் பாநதுமிக வேயியெ
சந்தனெனச சொல்வார் கனிந்து. 15

கனியாருஞ் சோலைக் கடற்புகார்ப் பந்தன்
முனியா னெவர்க்கு முதலோ - னினிதாக
நற்குடியோ ராயிரத்து நாகநதைப் பநதனே
முற்குடியே மூன்றாங குடி. 16

மூன்றாங் குடித்தலைவன் முன்னின்று நின்றகொடைச்
சான்றாண்மை நீதி தரும்வணிக - னொன்றகொடைப்
பந்தனைக் கீர்த்தி படைத்த வணிகேசன்
மைந்தனெனு மாபோதி மன். 17

பதியின்மல சோணுருவிற் பண்புடனே தோன்றி
மதுகரஞ்சூழ் தோன்றியந்தார் மார்பன்மயி லாடுதுறையினும்
சூழ்ந்தாரும் பூம்புகார்ச் சொல்வணிகன் பத்தனைவ்வோர்
வாழ்ந்தானென் வாழாக்கா லென். 18

நலமருவுஞ் சீர்த்தித் தருமா புரியோ
னலமருவும் வைகுந்த நாடன் - நலமருவும்
பொன்னித் புகார்வணிகன் போர்ப்பயந் தன்னையன்றிப்
பன்னிப் புகழாதிப் பார். 19

படியில்வரும் பூம்புகார்ப் பத்தனு கந்தை
குடியில்வருங் கோல்வளையார் கொள்கை - வடிவுடைய
கல்லுருவங் கொண்டாள் கணவன் வரக்கண்டு
கல்லுருவ னீத்தாள்கற் பால். 20

இச்செய்யுட்களால் வைசியர்களது தசாங்க வைபவமும், அருமையான கொடைத்திறனும், அவர்கள் மூன்றாமரபின ரென்பதும், நான்கா மரபினர்களுக்கு முன்னவ ரென்பதும், பிரமனுருவிற் றோன்றினோ ரெனபதும, ஆயிரங்கோத்திரத் தா ரென்பதும், வியாபாரம் வேளாண்மை பசுவோம்பலென்னு முத்தொழிலுடையா ரென்பதும், தெய்வானுக்கிரக முடைய வர்க ளென்பதும், அவர்களது ஸ்ரீகளின் கற்பின் சிறப்பும், பிறவுமாய மான்மியங்கள் நன்றாக விளங்கும்.

இவ்வளவு சிறப்புப்பொருந்திய வைசியர்கள் இப்போது சிறுபான்மை வேளாண்மையும பெரும்பான்மை வியாபாரமு மாகிய தொழில் வகித்தவர்களாய் வடதேசத்தில் சேட்டுக ளென்றும் இத் தமிழ் நாட்டிற் செட்டிக ளென்றும் வழங்கு வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் இரத்தினம் சுவர்ணமுதலிய வியாபாரம் முன்செய்து இப்போது வேறுவகையாக நூல், சவுளி, உலோகவகைகள், நவதானியம் முதலிய வியாபாரஞ் செய்து வருகிறார்கள்; அவ்வாறு வருபவர்கள் முன்னேற்பா டாக வழங்கியவாறு காசுக்காரச் செட்டிகளென்றும், அவர்க ளுள், ஆதியில் சோழதேயத்தி லிருந்து பாண்டியதேயத் திற்கு வந்தவர்கள் சோழியச் செட்டிகளென்றும், மஞ்சபுத்தூர், வக்காமணி, அமராமணி, துவரங்கட்டி முதலிய ஊர்களிலிருந்து பின்னிட்டுக் குடியேறினவர்கள் மஞ்சபுத்தூர்ச் செட்டிகளென் றும், வக்காமணிச் செட்டிகளென்றும், அமராமணிச் செட்டிக

ளென்றும், துவரங்கட்டிச் செட்டிகளென்றும், பின்னும் ட
திக்குடியேறினவர்கள் வடமர்களென்றும், பின்னும் பேரி
செட்டிகளென்றும், மளிகைச செட்டிகளென்றும், இன்னு
பலவிதவகுப்பாராகவழங்கப் படுகின்றனர். அவர்கள் ஸ்ரீ வட
ரணியக்ஷேத்திரகார்க்கோடக முஞ்சிகேசுவர அகோர இம்முடி
ஸ்ரீ மதுஅப்பைவ தருமசிவாசாரிய சுவாமிகளைக் குலகுருவாகப
பூசித்துத் திருவேலங்காடு நெறிஞ்சிப்பேட்டை யென்றுமி
ன்பி மடத்துச்சகலகாரிய நிர்வாக காரியஸ்தர்களாக விருந்துப்
வருகிறார்கள்-வைசிய கர்மானுஷ்டான விதிகளை எல்லாவகுப்
பார்களும்சக்தியானுசாரம் விடாது ஆசாரசீலர்களா யிருந்துவ
வருகிறார்கள். குலதெய்வமாகிய சுப்பிரமணியப் பெருமா
னுடைய நித்தியநைமித்திய உற்சவமுதலியகைங்கரியங்களைச்
சென்னை, திருத்தணிகை, திருப்பரங் குன்ற முதலான ஸ்
லங்கள் தோறும் செய்து சிறப்புப் பெறுபவர்களாகவு மிருந்
வருகிறார்கள். அன்றியுந் திருவண்ணாமலை மதுரைமுதலி
ஸ்தலங்களிலும் குலவைதிக உற்சவங்கள் மண்டபங்கள் மு
லிய காரியங்களும் ஒவ்வொரு வகுப்பாராகவாவது சிலவகு
பார் சேர்ந்தாவது நடப்பித்து மரியாதைபெற்று வருகிறா
கள். ஆனால், ஒருவகுப்பாருடன் ஒருவகுப்பார் பெண்கொ
வது கொடுப்பது ஆகிய சம்பந்தமில்லை யென்றாலும்,சமஆசா
சீலர்களாயிருக்கும் பக்ஷத்தில் போசனஞ்செய்தும் வருகிறா
கள் அவர்களது பூர்வாபரக் கிரியைகள் பெரும்பாலும் ஒத்தே
யிருக்கும் மரபுக்குரிய கன்னிகாவிவாகத்தைச் சிறுபான்மை
யோர் நழுவவிட் டிருப்பினும் அது காலகடையில் சீர்பெறுப
பெரும்பான்மையோர் சாஸ்திரவிதிப்படி உபநயனவிவாக சாம
தி சீமந்த முதலான சகலவைபவங்களும் தவறாமல் சக்திகேற்
பச்செய்தும் தருமங்களைப் பரிபாலித்தும் சர்வ ஐசுவரிய ச
பன்னராய்ச் சர்வேசுரன் கிருபாகடாட்சப் பிரசாதமுள்ளவர்க
ளாய்ச்சகலதேயத்துஞ் சிறந்த தமிழ்நாட்டிலும் மங்களகரமா
வாழ்ந்து வருகிறார்கள். இவர்களே சாஸ்திரோக்தமான மூன்று
மரபினர்களாய உத்தம வைசியர்க ளாவரென்பது சித்தம்
கடம்.

முற்றிற்று.

வைசியவாழ்க.